# ஜீவ மன்னா

## அனுதினமும்

**2015 ஒகஸ்ட்**

47 வது வெளியீடு



**"பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்."**

பரி.யோவான் 13:5




# அட்டைப்பட விளக்கம்

## கால்கள் கழுவும் கட்டளையை நிறைவேற்றுவது அவசியமானதா?

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவப் பிள்ளைகளே! பரிசுத்த வேதாகமத்தில் புதிய ஏற்பாட்டில் யோவான் 13வது அதிகாரத்தில் 3ம் வசனத்திலிருந்து தொடர்ந்து வாசிக்கும் போது எங்கள் இயேசுகிறிஸ்து சீஷர்களின் பாதங்களைக் கழுவி அதன் பிறகு தாம் அணிந்துக் கொண்டிருந்த சீலையினால், துடைக்கவும் தொடங்கினார் என எழுதப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு நடந்தது இன்றைக்கு 2015 வருடங்களுக்கு முன்பாகும்.



அன்பார்ந்த தேவப் பிள்ளைகளே! அதே அதிகாரத்தில் 15வது வசனத்தில் இப்படியாகக் கூறப்பட்டுள்ளது. "நான் உங்களுக்குச் செய்தது போல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்" என்றாகும். இவ்வசனத்தைக் கூறியது இயேசுகிறிஸ்துவே! தேவப் பிள்ளைகளே! பரிசுத்த வேதாகமத்தில் புதிய ஏற்பாட்டில் 1கொரிந்தியர் 11ம் அதிகாரத்தில் 23,24 ஆகிய வசனங்களில் இப்படியாக எழுதப்பட்டுள்ளதைக் காணலாம். நான் உங்களுக்கு ஒப்புவித்ததை கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டேன். என்னவெனில் தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி அதைப் பிட்டு நீங்கள் வாங்கிப் புசியுங்கள். இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது. என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். இந்த அப்பம் பிட்கும் கட்டளையை




எல்லா ஆத்மீக சபைகளிலும் தவறாது நிறைவேற்றுகிறார்கள். பரிசுத்த யோவான் 13:15இல் "நான் உங்களுக்குச் செய்தது போல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்" என்று வேதாகமத்தில் கூறியிருந்தும் அவைகளைக் கைக்கொள்ளாது, நடைமுறைப்படுத்தாது இருப்பது ஏன்? இந்தக் காரியங்கள் அனைத்தும் தேவன் தாமே வெளிப்படுத்திய வசனங்களாக வேதாகமத்தில் புதிய ஏற்பாட்டில் காண்கிறோம் அல்லவா?

தேவப் பிள்ளைகளே! பரி.யோாவன் 13:17இன் தேவ வசனத்தை வாசிக்கும் போது "நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால் இவைகளைச் செய்வீர்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள் என எழுதியிருப்பதைக் காணலாம்." தேவப் பிள்ளைகளே! தேவன் வாயிலிருந்து புறப்படும் ஒரு வார்த்தையாகிலும் வெறுமனே அவரிடத்திற்கு திரும்புவதில்லை என நாம் அறிந்துக் கொண்டிருக்கின்றோம். நாங்கள் ஞாயிற்றுக்கிழமை ஆராதனையில் இக்கட்டளையை நிறைவேற்றுவதில்லை மாதத்திற்கொரு முறை நடைபெறும் இராவிழிப்பு ஜெபத்தை 24 மணித்தியால ஜெபமாக மாற்றி அன்றே விடியற்காலை 2 மணிக்கு ஒருவரின் கால்களை ஒருவர் கழுவும்படியான கட்டளையை நிறைவேற்றி வருகின்றோம். பரி.யோவான் 13:17இன் தேவ வசனத்திற்கமைய எங்கள் சபையில் ஆத்மீக ஆசீர்வாதங்கள் இக்காரியங்களினால் அதிகரித்து வருகின்றது



☞ அட்டைப்படத்தின் பின் பக்கம் பார்க்கவும்

மகிமை இயேசு ராஜனுக்கே



## ஆசிரியர் உரை

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவப் பிள்ளைகளே.

## நித்திய ஜீவனை அளிக்கும் தேவ வசனங்கள்!

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள். ஜீவ மன்னா தின மஞ்சரியின் 47வது வெளியீட்டின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் அளவற்ற மகிழ்ச்சியடைகிறேன். எங்களுக்கு அநுக்கிரகம் செய்த பரலோகப் பிதாவுக்கே சகல கௌரவமும், மகிமையும், துதியும் உரித்தாகட்டும். இயேசுவின் பிரதான சீஷரான பவுலடியார் அவர்கள் பர்ணபாஸ் என்பவரோடு அந்தியோகியாவில் ஓய்வு நாளில் ஜெப ஆலயத்தில் பிரவேசித்து தேவ வசனங்களைப் பிரசங்கித்தார்கள். புற ஜாதியார் அந்த வசனங்களைக் கேட்டு சந்தோஷமடைந்து தேவனுடைய வசனங்களை மகிமைப்படுத்தினார்கள். நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளும்படியாக நியமிக்கப்பட்ட யாவரும் விசுவாசித்தார்கள். இயேசுகிறிஸ்துவின் வசனங்கள் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று என்று வேதாகமத்தில் (அப்போஸ்தலர் 13:44-49 வரை) எழுதப்பட்டுள்ளதைக் காணலாம்.

இன்றும் இவைகள் நடைப்பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏனென்றால் சில வேளைகளில் மனிதர்கள் இயேசுகிறிஸ்து அவரது சொந்த சீஷர்கள் மூலமாக நடத்துகின்ற அற்புதங்கள் வல்லமையான கிரியைகள், ஆச்சரியமானவைகள் என்பவற்றை, அவர்களது சொந்த கண்களால் காண முன்னர் அவர்கள் தம் கரங்களில் கிடைக்கும் ஜீவ மன்னா தின மஞ்சரியின் மூலம் அவர்கள் இயேசுகிறிஸ்துவை அறிந்துக் கொள்கிறார்கள். நிகழ்வதென்னவெனின் அவர்களின் உள்ளத்தில் ஒரு மாற்றம் உருவாகின்றது. மனிதனை உருவாக்கிய தேவனின் வசனத்தின் வல்லமை மனிதனது ஆவியோடு சம்பந்தப்படுகின்றது.

ஆகையால் இந்த தேவ இராஜ்யத்தின் காரியங்களுக்கு எவ்வளவாக தடைகள் ஏற்படினும் நாம் வீரியத்தோடு போராடி தடைகளை நிர்மூலமாக்கும் இயேசுவோடு கூட முன் செல்கின்றோம். இந்த ஜீவ மன்னா தின மஞ்சரியை இன்னும் அநேகருக்கு அறிமுகப்படுத்தி நீங்களும் ஒத்தாசை நல்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் விமர்சனக் கடிதங்களை எமக்கு கிடைக்கச் செய்யுங்கள். தேவ வசனங்களை உலகமெங்கும் விதைக்கும்படியாக எம்மோடு இணைந்து பணிபுரியும் பங்காளராகி தேவ ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். கர்த்தருடைய கிருபை உங்களோடிருப்பதாக!

**விதைகளை நிலத்தில் விதைப்பது போல் தேவ!**
**வசனங்களை உள்ளத்தில் விதைத்திடும்!**
**வான அப்பமான ஜீவ மன்னா தினமஞ்சரி!**
**வழங்கிடும் தினமும் ஆவிக்குரிய செய்திகளை!**

இப்படிக்கு
இயேசு கிறிஸ்துவுக்குள்
போதகர் ஏ.ஜே.ஜோசப்
இயேசு கைவிடார் சுவிஷேசப் பணியகம்

**மன்னா வாசகர்களே TM இலக்கத்தை அனுப்ப மறந்துவிட வேண்டாம்.**

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
01 சனி

## உங்கள் இருதயத்தை தேவனுக்குள் ஸ்திரப்படுத்துங்கள்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 01 – 02

**"நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே."**
(யாக்கோபு 5:8)

அருமையான தேவ பிள்ளைகளே! **இயேசுகிறிஸ்துவின் இணையற்ற, வல்லமையான நாமத்தில் எனது அன்பின் வாழ்த்துக்கள்.** மாதத்தின் முதல் நாளான இன்று கடந்த நாளில் கண்ணின் மணியாக எம்மை பாதுகாத்த தேவனையே ஸ்தோத்தரிக்கின்றேன். நீங்களும் நானும் முழு உள்ளத்தோடு இயேசுகிறிஸ்துவை எமது ஒரே இரட்சகர் என்பதை ஏற்றுக் கொண்டமையால் **பரலோக தேவனின் பிள்ளைகளாக இருக்கின்றோம்.** ஆனாலும் உலகில் அநேக மனிதர்கள் இயேசுகிறிஸ்துவே எங்கள் இரட்சகர் எனவும், அவர் ஜீவனுள்ளவராக எங்கள் மத்தியில் வாசம் பண்ணுகிறார் என்பதையும் முழு உள்ளத்தோடு விசுவாசியாதபடியால் இன்னுமாக தேவ பிதாவண்டை கிட்டிச் சேர முடியாதிருக்கின்றனர். ஆனாலும் இயேசுகிறிஸ்துவை **முழு உள்ளத்தோடு ஏற்று விசுவாசிக்கும் நாம் அதிர்ஷ்டக்காரர்களாவோம்!**

தேவ பிள்ளைகளே! பிரதான தேவ வசனத்தில் கூறுகின்றதாவது **நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துங்கள்.** கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே என்றாகும். அதன் கருத்து என்னவெனின் இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதில் மாத்திரம் திருப்தியடையாது தேவனுக்குள் எம்மை ஸ்திரப்படுத்த வேண்டும் என்பதாகவே **பரி.யோவான் 14:27**இல் இயேசுகிறிஸ்து எமக்குக் கூறுவது **"சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்."** உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை என்றாகும். ஆகையால் உங்கள் ஆத்மீக வாழ்வின் பயணத்தில் எவ்வளவாக உபத்திரவங்கள், பிரச்சினைகள் வந்தாலும் நீங்கள் அவைகளை எண்ணி அதைரியமாகாமல் அனைத்தையும் செய்து முடிக்க வல்ல இயேசுவை நோக்கிப் பாருங்கள்.

தேவ பிள்ளைகளே! விஷேடமாக இது சம்பந்தமாக நீங்கள் அதிகமதிகமாக தேவ வசனத்தை வாசிக்க, **அவைகளை விசுவாசிப்பது அவசியம்.** அது மாத்திரமின்றி இடைவிடாது தேவ பாதத்தில் ஜெபம் பண்ணி **உங்கள் உள்ளத்தை தேவ ஆவியின் அபிஷேகத்தில் நிரம்பி பெலப்படுங்கள்.** எங்கள் திறமையாலும், எங்கள் பெலத்தினாலும் ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னோக்கிச் செல்ல முடியாது. தேவ ஆவியானவரது அபிஷேகம், பெலனில் மாத்திரமே எமது ஆத்மீக வாழ்வில் முன்னோக்கிச் செல்ல முடியும். **ஆத்மீக வாழ்வின் மாபெரும் வெற்றியானது பரலோகத்தில் ஜீவகிரீடம் அணிவதே** என்பதால் நீங்கள் இறுதிவரை **உங்கள் இருதயத்தை தேவனுக்குள் ஸ்திரமாக வைத்துக் கொள்ளுங்கள். வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! உங்கள் மகனான இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை மிகச் சமீபமாக இருக்கின்றதென்பதால் நாங்கள் உங்களுக்குள் ஸ்திரமாக இருக்க வேண்டுமென்பதை நான் அறிந்துக் கொண்டேன். உங்களுக்குள் ஸ்திரமாக வாழ்ந்த வாழ்வில் ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ள எனக்கு உதவி செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.

–ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"வருகிறவர் இன்னுங் கொஞ்சக்காலத்தில் வருவார், தாமதம்பண்ணார்." (எபிரேயர் 10:37)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
02 ஞாயிறு

## உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 03 – 04

**"தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்."** (1 கொரிந்தியர் 1:9)

அருமையான தேவ ஜனங்களே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ***இன்றைய நாளில் பூமியும் இதன் நிறைவும் கர்த்தருடையது எனும் வசனத்தின்படி நிறைவுடன் வாழ வாழ்த்துகின்றேன். நாங்கள் பாக்கியவான்களும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களுமாக இருக்கின்றோம்.*** ஏனென்றால் எங்கள் பாவ சாபங்களில் எங்களை மீட்டுக் கொள்ள சிலுவையில் பலியாகி எங்களுக்காக திருரத்தம் சிந்திய இயேசுகிறிஸ்துவினால் ***நாம் அனைவரும் பரத்தில் வாசம் பண்ணும் நீதியின் உறைவிடமான தேவ பிதாவின் புத்திரர்களாவோம்.***

தேவ பிள்ளைகளே! நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய சுய விருப்பத்தின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பிள்ளைகளாவோம். ஏனெனில் தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு கூறுவதென்னவெனில் ***ஏசாயா 44:1***இல் இப்போதும் ***"என் தாசனாகிய யாக்கோபே நான் தெரிந்துக் கொண்ட இஸ்ரவேலே கேள்"*** என்றாகும். அதன் விளக்கம் என்னவெனில் தேவனாகிய கர்த்தர் தனது உள்ளத்தின் எண்ணத்தின்படியே எம் ஒவ்வொருவரையும் தெரிந்துக் கொண்டார் என்பதையே. ***தேவனின் சாயலாகப் படைக்கப்பட்ட நாம் அனைவரும் தேவன் முன்னிலையில் மிக அருமையானவர்கள் ஆவோம்.*** நீங்கள் இதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள். நாம் பாவிகளாக இருக்கும் போதே தேவன் எம்மைத் தெரிந்து கொண்டார். ***நாம் பாவ வாழ்வில் விடுதலை பெற்ற பின்னர் எம்மைத் தெரிந்துக் கொள்ளவில்லை.*** உலக மனிதர்களை நாம் எவ்வளவாக சிநேகித்தாலும் அவர்கள் எம்மைப் புரிந்துக் கொள்ளாத சந்தர்ப்பங்களே அதிகம். நாம் அவர்களுக்கு நன்மையான காரியங்களைச் செய்ய முற்படுகின்ற வேளைகளில் அவைகளுக்குத் தடைகளை உண்டு பண்ணி நிறுத்துவதற்கு ஏதுவாக செயல்படுகின்றார்கள்.

தேவ பிள்ளைகளே! உங்களை அழைத்த தேவன் உங்களை விட உங்களை நன்றாக அறிந்தவராக இருக்கின்றார். ***உங்கள் உள்ளத்தை தேவன் அறிந்தவராக இருக்கின்றார்.*** இயேசு எம்மைத் தெரிந்துக் கொண்டமையால் உங்களது எந்த பிரச்சினையின் போதும், ***எந்தவொரு ஆபத்தின் போதும் உங்களுக்கருகாமையில் இருக்கின்றார்.*** தனது சொந்த குமாரனை உங்களுக்காக சிலுவையில் பலியாக ஒப்புக் கொடுக்க சித்தமாகி உங்களைத் தன்னிடத்தில் அழைத்துக் கொண்ட தேவன் ***உங்களை உள்ளன்போடு எவ்வளவாக நேசிக்கின்றார் என்பதனை சற்று சிந்தித்துப் பாருங்கள். 1கொரிந்தியர் 1:9***இல் ***"தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவராயிருக்கின்றார்."*** என எழுதப்பட்டுள்ளது. ஆகையால் ***கலங்காதீர்கள்! வெற்றிச் சிறந்த நாள்!***

**ஜெபம்**

என் தேவனே! நீங்கள் என்னை அழைத்துக் கொண்டபடியால் உங்களை ஸ்தோத்தரிக்கின்றேன். நீங்கள் நித்திய காலமும் மாறாத விசுவாசமுள்ள தேவன். நான் உங்களை விசுவாசத்தோடு பார்க்கின்றேன். நீங்கள் என்னை ஆசீர்வதியுங்கள் இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

**இன்றைய வாக்குத்தத்தம்**

"உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்." (1 தெசலோனிக்கியர் 5:24)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
03 திங்கள்

## நீங்கள் நற்கனிகளைக் கொடுப்பது எப்படி?

வேதவாசிப்பு
யோபு
அதி: 05 – 06

**"நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது; கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது."** (பரி.மத்தேயு 7:18)

பிரியமான தேவப் பிள்ளைகளே! ***ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தினால் நன்மையான சுவுகளைப் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றேன்.*** இவ்வுலகில் பாவிகளாக இருந்த எம்மைத் தம்மண்டை அழைத்துக் கொண்டு அவரது இரத்தத்தினால் பரிசுத்தமாக்கிய இயேசுகிறிஸ்து ***இன்றும் எங்களோடு ஜீவிக்கின்ற தேவனாக வாசம் பண்ணுகிறார்.*** ஏனென்றால் தேவன் எங்களுக்காக சிலுவையில் மரணித்தது எங்கள் வாழ்வில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தும் முகமாகவேயாகும். இல்லாவிடின் ***பாவிகளாக இருந்த எம்மை நீதிமான்களாக்குவதற்கே.***

தேவ பிள்ளைகளே! ***"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்."*** என்று **ரோமர் 5:8**இல் எழுதப்பட்டுள்ளது. எங்கள் தேவப் பிதாவானவர் எம்மை எவ்வளவாக நேசிக்கின்றார் என்பதை இயேசுகிறிஸ்துவின் மூலமாக எங்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார். ஆகையால் ***தேவனுக்குக் கீழ்படிந்து அவரை வேதனைப்படுத்தாது வாழ நாம் எல்லா வேளையிலும் முயற்சி செய்வோம்.*** இன்றைய நாளிலும் தேவன் எமக்குக் கூறுவது என்னவெனின் ***நாம் தேவனுக்குள்ளாக வாழ்கின்ற போது நற்குண நலன்கள், நற்பண்புகள் எம்மிடம் காணப்பட வேண்டும் என்பதே.*** ஆனாலும் நாம் இயேசுகிறிஸ்துவுக்குள்ளாக வாழ்கிறோம். என்று கொண்டு எமது வாழ்வில் தீமையான குணங்கள், அக்கிரமமான, அநீதியான செயல்கள் காணப்படின் நாம் உண்மையிலேயே தேவனுக்குள்ளாக ஜீவிக்கவில்லை என்று தேவன் கூறுகின்றார்.

தேவப் பிள்ளைகளே! ஆகையால் **பரி.மத்தேயு 7:18**இல் தேவன் கூறுகின்றார் ***"நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்க மாட்டாது. கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்க மாட்டாது"*** என்றாக. ஆகையால் ***மனங் கலங்காதிருங்கள்***! நீங்கள் எல்லா வேளையிலும் தேவ வசனங்களுக்கு செவி கொடுத்து அதன்படி, அதன்படி உங்கள் வாழ்வில் நன்மையான மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முயற்சி செய்யுங்கள். தேவ வசனமானது உங்கள் வாழ்வில் கைக் கொண்டு வாழ ***இடைவிடாத ஜெபத்துடன் தேவ ஆவியில் நிறைந்திருங்கள்.*** அப்பொழுது நீங்கள் தேவ வசனத்தின்படி வாழ்ந்து உலகில் நல்ல ***தேவ பிள்ளையாக வாழும் பாக்கியத்தை பெற்றவர்களாவீர்கள்.*** ஏனென்றால் தேவன் உண்மையுள்ள-வராகையால் நீங்கள் தேவனுக்குள் நிலைக்கும் நேரத்தில் உங்கள் வாழ்விற் கூடாக ***நற்கனிகளைக் கொடுக்கும் மரத்தைப் போன்று செழிப்புடன் இருப்பீர்கள். இன்று வெற்றிகரமான*** நாள்!

**ஜெபம்**

என் தேவனே உங்கள் மகனுக்குள் நிலைக்க வேண்டுமெனின் நற்கனி கொடுக்கும் மரமாக வாழ வேண்டுமென்பதை இன்று எனக்குள் கற்பித்தபடியால் நன்றி! ஆகையால் இன்று முதல் நல்ல கனி கொடுக்க கிருபை செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்."
(பரி.யோவான் 15:4)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
04 செவ்வாய்

## உங்கள் சத்துருக்களை தேவன் மிதித்துப் போடுவார்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 07 – 08

"தேவனாலே பராக்கிரமம் செய்வோம்; அவரே எங்கள் சத்துருக்களை மிதித்துப்போடுவார்." (சங்கீதம் 60:12)

அன்பார்ந்த தேவப் பிள்ளைகளே! இயேசுவின் இணையற்ற நாமத்தில் **இப்புதிய நாளில் தேவ கிருபை உங்களை ஆட்கொண்டு அதிசய வண்ணமாக வழி நடத்தும்படியாக வாழ்த்துகின்றேன்.** உலக மனிதர்கள் அநேக துன்ப, துயரங்களுக்கு முகங் கொடுக்கின்றார்கள். ஆத்மீகர்களாகிய நாமும் அப்படியாக இருக்கலாம். ஆனாலும் இவைகள் அனைத்திற்கும் மேலாக **எங்கள் எதிராளியின் மூலம் எங்களுக்கு வருகின்ற துன்பங்கள், இடையூறுகள், சவால்கள்** அதிகமாக இருக்கின்றன. மனிதர்களாகிய எங்களுக்கு விரோதமாக செயல்படுவது இன்னுமொரு மனிதனே என எண்ணுகின்ற வேளை **உங்களுக்கு உள்ளத்தில் வேதனைகள் ஏற்படலாம்.**

தேவப் பிள்ளைகளே! ஆனாலும் **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!** ஒரு மனிதன் உங்களிடம் உதவி, ஒத்தாசைகள் பெற்று சில காலங்களில் அவைகளை மறந்து **உங்களுக்கு விரோதமாக செயல்படுவாயின் உண்மையிலேயே அந்த மனிதனைக் குறித்து உள்ளத்தில் ஒரு வெறுப்பு உண்டாகலாம்.** ஐயோ நான் இந்த மனிதனுக்கு எவ்வளவாக உதவி செய்துள்ளேன்? அப்படியிருந்தும் இந்த மனிதன் எனக்கு இப்படிச் செய்கிறானே? என்று **நீங்கள் வேதனையடையலாம்.** அப்படியே உங்கள் வாழ்வில் காணப்படும் குறைகள், பலவீனங்கள் இல்லாவிடின் உங்கள் வாழ்வில் கடந்த காலங்களில் ஏற்பட்ட நிகழ்வுகளை அறிந்த அந்த மனிதன் அறிந்தமையால் அவனது எதிர்ப்பு **உங்களை வெட்கப்படுத்தி, நிந்தனைக்குள்ளாக்கும் என்னும் பயத்துடன் வாழ்கின்றீர்களா?** ஆனாலும் **ஒரு போதும் பயப்படாதீர்கள்.**

தேவப் பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட **சங்கீதம் 60:12**இல் கூறப்பட்டுள்ளதாவது, "**தேவனாலே பராக்கிரம செய்வோம் அவரே எங்கள் சத்துருக்களை மிதித்துப் போடுவார்**" என்றாகும். ஆகையால் உங்கள் முழு உள்ளத்தோடு தேவனை விசுவாசித்து ஜீவிப்பீர்கள் என்றால் உங்களோடு நட்பு கொண்டு மிக நெருக்கமான ஆழமான அன்போடு இருந்தவர்கள் எனினும் விரோதமாக மாறினார்களா? **பயப்படாதீர்கள்! உங்கள் உள்ளம் அதைரியப்படாமலிருப்பதாக!** தேவன் உங்கள் பட்சமாயிருந்து மீட்டுக் கொள்வார். எனினும் **நீங்கள் அவர்களுக்கு விரோதமாக தீமைகளைச் செய்யாதிருங்கள். நீங்கள் தேவனோடு இணைந்திருந்து ஜெயத்தைப் பெறுங்கள். வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் என் பட்சமாக இருந்து என் எதிரிகளை மிதித்து போடுகின்ற தேவன் என்பதால் உங்களுக்கு நன்றி! எதையும் குறித்துக் கவலைப்படாது உங்களுக்குள் பெலனாக வாழ கிருபை செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது." (சங்கீதம் 91:7)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
05 புதன்

**விசுவாசத்துடன் முகங் கொடுத்து பிரச்சினைகளில் வெற்றி பெறுங்கள்!**

வேதவாசிப்பு
யோபு
அதி: 09 – 10

"பெரிய பர்வதமே, நீ எம்மாத்திரம்? செருபாபேலுக்கு முன்பாக நீ சமபூமியாவாய்;..." (சகரியா 4:7)

அன்பார்ந்த தேவப் பிள்ளைகளே! ***ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஆயிரம் தலை முறைகளை ஆசீர்வதிக்கும் தேவன் உங்களோடிருப்பாராக!*** ***என இன்றைய நாளில் வாழ்த்துகின்றேன்.*** இன்றைய நாளிலும் உங்கள் வாழ்வில் பிரச்சினைகள் மலைகளைப் போல் தோன்றலாம். ஆனாலும் கூட ***கலங்காதிருங்கள்!*** மேலே குறிப்பிட்ட பிரதான தேவ வசனத்தில் கூறப்பட்டுள்ளது. "***பெரிய பர்வதமே நீ எம்மாத்திரம் செருபாபேலுக்கு முன்பாக சமபூமியாவாய்***" என்றாகும்.

தேவப் பிள்ளைகளே! நீங்கள் தைரியமாயிருங்கள் இன்றைய நாளில் நீங்கள் பெரியதொரு பிரச்சினைக்கு முகங் கொடுப்பவராய் இருக்கலாம். நான் எப்படியாக இப்பிரச்சினைக்கு பதிலைப் பெறுவேன்? யாரிடம் நான் உபகாரம் பெற்றுக் கொள்வேன் என்று ***நினைத்து நீங்கள் வேதனைப்படுகின்றீர்களா?*** இன்று முதல் அவ்வாறாக ***நினைத்து கவலைப்படுவதை தவீர்த்துக் கொள்ளுங்கள்.*** உங்கள் முன்னிலையில் பெரிய மலையாக நிற்கின்ற பிரச்சினையைக் கூற ***சமபூமியாக தரைமட்டமாக்க எங்கள் தேவனால் கூடும்.*** உங்களைக் கொண்டே பிரச்சினையை பேசி அதற்கு ***எதிராக சவால் விடுத்து அதைத் தோல்வியடையச் செய்ய தேவனால் கூடும்.*** ஆனாலும் முதன் முதலாக இயேசுவுக்கு சகலவற்றையும் செய்ய முடியுமென ***நீங்கள் முழு உள்ளத்தோடு விசுவாசிக்க வேண்டும்.*** அப்பொழுது மலையாகக் காணப்படுகின்ற பிரச்சினைகள் உங்கள் முன்னிலையில் தரைமட்டமாகி ஒழிந்து போகும்படியாக கடிந்துக் கொள்ள உங்களால் ஆகும்.

தேவப் பிள்ளைகளே! பரிசுத்த வேதாகமத்தில் ***பரி.மாற்கு 11:23***இல் இயேசுகிறிஸ்து எங்களுக்கு கூறுவதென்னவென்றால் "***எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டு போ***" என்று சொல்லி நான் சொன்னபடியே நடக்கும் என்று ***தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால் அவன் சொன்னபடியே ஆகும்.*** என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்றாகும். ஆகையால் இயேசுகிறிஸ்துவின் பேரில் நீங்கள் வைத்திருக்கும் விசுவாசம் எவ்வளவோ அந்த அளவில் நீங்கள் எண்ணற்ற தேவ ஆசீர்வாதங்களைப் பெறுவீர்கள். ஆகையால் உங்கள் பிரச்சினைகள் எவ்வளவு விசாலமாக காணப்பட்டாலும் துணிகரமாக ***அவைகளுக்கு முகங் கொடுத்து அவைகளில் வெற்றி பெற முடியுமென விசுவாசியுங்கள்.*** இன்று முதல் உங்கள் பிரச்சினைகளைக் குறித்து ***பயப்படாதீர்கள்!*** உலகை வென்ற இயேசுகிறிஸ்து இன்றும் ஜீவிக்கின்றவராய் உங்களோடிருக்கிறார் என்பதை விசுவாசித்து அவைகளுக்கு முகங் கொடுத்து வெற்றி பெறுங்கள். ***வெற்றிச் சிறந்த நாள்!***

ஜெபம்

என் தேவனே! எங்கள் முன்னிலையில் காணப்படுகின்ற மலையைப் போன்ற பிரச்சினைகள் சமபூமியாக்குகின்ற தேவனாவீர்கள் நான் உங்கள் பேரில் விசுவாசம் கொண்டு பயமில்லாமல் அவைகளுக்கு முகங் கொடுப்பேன் என்னை ஆசீர்வதியுங்கள் இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

தேவ வாக்குத்தத்தம்

"இதோ, போரடிக்கிறதற்கு நான் உன்னைப் புதிதும் கூர்மையுமான பற்களுள்ள யந்தரமாக்குகிறேன்; நீ மலைகளை மிதித்து நொறுக்கி, குன்றுகளைப் பதருக்கு ஒப்பாக்கிவிடுவாய்." (ஏசாயா 41:15)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
06 வியாழன்

உங்களுக்கு விரோதமாக வருபவர்களைக் குறித்து பயப்படாமல் விசுவாசத்தோடு முன்செல்லுங்கள்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 11 – 12

**"தாவீது சவுலை நோக்கி: இவனிமித்தம் ஒருவனுடைய இருதயமும் கலங்க வேண்டியதில்லை; உம்முடைய அடியானாகிய நான் போய், இந்தப் பெலிஸ்தனோடே யுத்தம்பண்ணுவேன் என்றான்."**
(1 சாமுவெல் 17:32)

அருமையான தேவப் பிள்ளைகளே! நித்தியமானவரும், பரிசுத்தமானவருமான **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் இன்று மகிழ்ச்சியுடனும், மனநிறைவுடனும் வாழும்படியாக வாழ்த்துகின்றேன்.** உங்கள் வாழ்க்கையில் முகங் கொடுக்க நேரிடுகின்ற எந்தவொரு காரியத்தையுங் குறித்து **மனக் குழப்பத்திற்கு இடங் கொடுக்காதீர்கள்.** ஏனென்றால் உங்கள் உள்ளம் குழப்பத்திற்குள்ளாகின்ற போது **உங்கள் எதிராளியான சத்துருவானவன்** உங்கள் ஆத்மீக வாழ்வை பின்மாற்றமாக்க அதை பயன்படுத்திக் கொள்வான்.

தேவப் பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட **1 சாமுவேல்17:32** இல் குறிப்பிடப்பட்டுள்ளாதாவது. தாவீது எனும் இளைஞன் இஸ்ரவேல் இராஜாவான சவுலுக்குக் கூறிய வசனமேயாகும். பெலிஸ்த யுத்த **சேனையில் கோலியாத் எனும் வீரன் ஒருவனிருந்தான்.** அவர்கள் முன்னிலையில் இஸ்ரவேல் இராணுவமும், **இஸ்ரவேல் அரசனான சவுலும் கலங்கி பயப்பட்டார்கள்,** பின் வாங்கினார்கள். ஆனாலும் இஸ்ரவேல் சேனைகளில் இருந்த ஈசாயின் மூன்று குமாரர்களுக்கும் ஆகாரங் கொண்டு இரதங்கள், யுத்த சேனைகள் அணிவகுத்து நின்றுக் கொண்டிருந்த இடத்திற்கு **ஈசாயின் இளைய குமாரனான தாவீது வந்தான்.** தாவீது பெலிஸ்தரின் சேனைகளில் எழும்பி நின்ற வீரனான கோலியாத்தைக் கண்டு பயமின்றி அவனுக்கு விரோதமாக யுத்தம் பண்ண முன் வந்தான். **நாற்பது நாள் காலை, மாலை இஸ்ரவேல் ராஜாவையும், இஸ்ரவேல் சேனையையும் கலங்கச் செய்த ஆறு முழம்** ஒரு ஜாண் உயரமும் கொண்ட தலையில் வெண்கல சீராவைப் போட்டு, போர்க் கவசத்தையும், தோள்களில் வெண்கல கேடகத்தையும் தரித்திருந்தான். ஆறுநூறு சேக்கல் இரும்பைக் கொண்ட ஈட்டியையும் கொண்டிருந்த கோலியாத்தைக் கண்ட **தாவீதிற்கு ஆற்றிலிருக்கின்ற ஐந்து கூழாங்கற்களும் தனது கவணும் தனது தடியுமே போதுமானதாக இருந்தது.**

தேவப் பிள்ளைகளே! தாவீது கோலியாத் முன்னிலையில் வந்தது இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் அவனோடு இருக்கின்றார் என்று **முழு உள்ளத்திலும் விசுவாசித்துக் கொண்டேயாகும்.** ஏனென்றால் **"கர்த்தர் பட்டயத்தினாலும், ஈட்டியினாலும். இரட்சிக்கிறவர் அல்ல என்று இந்த ஜனக்கூட்டமெல்லாம் அறிந்துக் கொள்ளும் யுத்தம் கர்த்தருடையது அவர் உங்களை எங்கள் கையில் ஒப்புக் கொடுப்பார்."** என்று தாவீது பெலிஸ்தனுக்கு கூறினான். **(1 சாமுவேல் 17:47இல்)** அப்படியே தாவீது **பெலிஸ்தனை தோற்கடித்தான். தேவன் இன்றும் உங்களோடிருக்கிறார். இன்று ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

என் தேவனே! என எதிராளியான சாத்தான் என்னை அதைரியப்படுத்தி என்னைத் தோல்வியடையும்படி செய்ய முயற்சி செய்வான். ஆனாலும் நீங்கள் எனது உள்ளத்தை தைரியப்படுத்திக் கொள்ள உதவி செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள்; ஆனாலும் உன்னை மேற்கொள்ளமாட்டார்கள்; உன்னை இரட்சிக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (எரேமியா 2:19)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
07 வெள்ளி

## தேவ சத்தத்திற்கு கீழ்படியுங்கள் தேவன் உங்கள் வாழ்வைக் கட்டுவார்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 13 – 14

"தூரத்திலுள்ளவர்கள் வந்து கர்த்தருடைய ஆலயத்தைக் கூட இருந்து கட்டுவார்கள்; அப்பொழுது சேனைகளின் கர்த்தர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினாரென்று அறிந்துகொள்வீர்கள்;..."
(சகரியா 6:15)

அருமையான தேவ ஜனங்களே! **இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் நன்மையான நல்லதொரு நாளைப் பெற்று மகிழ்ந்திருக்குமாறு இக்காலைப் பொழுதில் வாழ்த்துகின்றேன்.** பரலோகத்தில் வாசம் செய்யும் ஜீவிக்கின்ற தேவப் பிதாவானவர் அவரது பிள்ளைகளுக்கு எல்லா **காரியங்களிலும் துணையாக நிற்கும் ஒரே தேவனாவார்.** மாம்ச பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு எவ்வளவாக பராமரிக்கின்றார்கள்? அதனை விட கருத்தாய் எம்மை பராமரிக்கும் தேவனாக இருக்கின்றார்.

தேவப் பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட ***சகரியா 6:15***இல் தேவ வசனத்தில் கூறுகின்றதாவது ***"தூரத்திலுள்ளவர்கள் வந்து கர்த்தருடைய ஆலயத்தைக் கூட இருந்து கட்டுவார்கள். அப்பொழுது சேனைகளின் கர்த்தர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினாரென்று அறிந்துக் கொள்வீர்கள்"*** என்றாகும். அப்படியாக நிகழ்வது எங்கள் தேவனின் சத்தத்திற்கு உண்மையாகவே கீழ்படிந்தால் மாத்திரமே என வசனத்தில் கடைசியாகக் கூறப்பட்டுள்ளது. நீங்களும் இதைக் குறித்து சற்று சிந்தித்துப் பாருங்கள். **நான் எனது 14 வருட தனி ஊழிய ஆரம்ப வேளையில் எனக்கு தேவன் வழிக்காட்டியது போல கொஸ்வத்தை எனும் பிரதேசத்திற்குச் சென்று போக்குவரத்து நடைபெறுகின்ற பிரதான வீதிக்கு அருகாமையில் ஒரு இடத்தில் ஊழியத்தை ஆரம்பித்தேன்.** ஆனாலும் அந்த இடத்தில் ஊழியத்தில் ஏற்பட்ட ஒரு பிரச்சினையின் காரணமாக வேறொரு இடத்திற்கு மாற வேண்டியேற்பட்டது. அதன் பிறகு சில கிழமைகளுக்குப் பின்னர் அந்த பிரதேசத்திலேயே இருக்கின்ற பிறிதொரு ஆத்மீக சகோதரர் ஒருவர் தொலை பேசியில் அவருடைய வீட்டை கூலிக்குக் கொடுக்க தீர்மானித்திருப்பதினால் அத்தோடு (நான் ஜெபிக்கின்ற போது) **தேவன் என்னுடைய வீட்டை உங்கள் ஊழியத்திற்காக கொடுக்கும்படியாக தேவன் எனக்கு வெளிப்படுத்தினார்.** ஆகையால் நீங்கள் வந்து ஊழியத்தை ஆரம்பியுங்கள் என்றார்.

தேவப் பிள்ளைகளே! அந்த சிறிய இடத்தில் ஆரம்பிக்கப்பட்ட எமது தேவ சபை வளர்ச்சியடைந்து அந்த இடம் போதாமல் போக **முதன் முதலாக ஊழியம் ஆரம்பித்த இடத்திற்குக் கொண்டு சென்று எட்டு வருடம் அங்கே ஊழியத்தை நடத்திச் செல்ல தேவன் பெருமளவில் ஆசீர்வதித்தார்.** நாம் தேவனுக்கு கீழ்படியும் போது எங்கள் ஊழியம் இவ்வாறாகக் கட்டப்பட்டால் உங்கள் வாழ்வையும் தேவன் இப்படியாகக் கட்டுவார். வெற்றிச் சிறந்த நாள்!

ஜெபம்

என் இயேசுவே! உண்மையிலேயே நாங்கள் உங்கள் சத்தத்திற்கு கீழ்படிந்தால் எம்மை ஆசீர்வதித்து எங்கள் வாழ்வை கட்டுகின்றபடியால் நானும் உங்களுக்குள் கீழ்படிய உதவி செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"அப்பொழுது நான் பிடுங்கவும் இடிக்கவும் நிர்மூலமாக்கவும் அழிக்கவும் தீங்குசெய்யவும் அவர்கள்பேரில் எப்படி ஜாக்கிரதையாயிருந்தேனோ, அப்படியே கட்டவும் நாட்டவும் அவர்கள்பேரில் ஜாக்கிரதையாயிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்."
(எரேமியா 31:28)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
08 சனி

## இயேசுவை விசுவாசிக்கின்ற நீங்கள் ஒரு போதும் வெட்கப்படுவதில்லை!

வேதவாசிப்பு
யோபு
அதி: 15 – 16

**“இதோ, தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்; அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை என்று வேதத்திலே சொல்லியிருக்கிறது. ஆகையால் விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப்பெற்றது;...”** (1 பேதுரு 2:6,7)

அருமையான தேவப் பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் என்றென்றும் நிலைத்திருக்கும் **தேவ வசனத்தை இறுகப் பிடித்துக் கொள்ளுங்கள் என இன்றைய நாளில் வாழ்த்துகின்றேன்.** சுமார் **2 கோடியே 3 இலட்சமளவில்** எல்லா இலங்கையர் மத்தியில் பரலோகத்தில் வாசம் பண்ணுகின்ற பிதாவானவரின் உன்னத அழைப்பை பெற்று ***அவரின் சொந்தப் பிள்ளையாக தெரிந்துக் கொள்ளப்பட்ட நீங்கள் மிகவும் அதிரஷ்டக்காரர்கள்!*** உங்களுக்கு ஒத்தாசை கிடைப்பது வானத்தையும், பூமியையும் படைத்த தேவப் பிதாவிடமிருந்தே!

தேவப் பிள்ளைகளே! **1 பேதுரு 2:6,7** வசனங்களில் எழுதப்பட்டிருப்பது **“தேவன் பேரில் விசுவாசமாய் இருப்பவர் வெட்கப்படுவதில்லையென வேதத்தில் சொல்லியிருக்கிறது.”** ஆகையால் விசுவாசிக்கின்ற உங்களுக்கு **அது விலையேறப் பெற்றது என்றாகும்.** ஆகையால் **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!** நீங்கள் தேவனை உங்கள் தேவனென்று ஒரு போதும் அறிந்துக் கொண்டிருக்கவில்லை. ஆனாலும் பெரும்பாலான இலங்கையார்கள் மத்தியில் உங்களுக்கு தேவன் ஜீவனுள்ளவராக இருக்கிறாரென்றும், தேவன் உங்களை அவர் எவ்வளவாக நேசிக்கின்றாரென்றும், நீங்கள் அறிந்துக் கொண்டது தேவனாலேயாகும். அத்தோடு ***உங்களைத் தனது சுய அபிப்பிராயத்தின்படியும் தனது சொந்த விருப்பத்தின்படியும் உங்களைத் தெரிந்து கொண்டதனாலேயாகும்.*** ஆகையால் உங்களைப் போன்று ஆசீர்வாதம் பெற்ற இன்னுமொருவர் உலகில் இல்லையென என நினைக்கின்றேன்.

தேவப் பிள்ளைகளே! தேவ வசனத்தில் கூறப்படுகின்றதாவது அவர்கள் இரத்தத்தினாலும், மாம்சத்தின் பிரியப்படியோ, மனிதர்களது பிரியப்படியோ அல்ல ***தேவனிடமிருந்து பிறந்தவர்கள் என்றாகும்.*** ஆகையால் தனக்கே என உலகில் வேறுபிரித்துக் கொண்ட தேவப் பிதாவானவர் ***உங்களை ஒரு போதும் கைவிடமாட்டார்.*** நீங்கள் தேவனுக்குச் சொந்தமாகையால் நீங்கள் தேவனது பிரியம் என்ன? என்பதை அறிந்து, அதன்படி ஜீவிக்க வேண்டும். கடந்தக் காலத்தில் ***நீங்கள் மனம் போலே உலகில் வாழ்ந்தீர்களா?*** ஆனாலும் இப்போது நீங்கள் அப்படியல்லாது **தேவனின் விருப்பம் போன்று வாழுங்கள். நீங்கள் ஒரு போதும் வெட்கப்படாமல் எல்லோராலும் போற்றப்படுவீர்கள். வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் என்னை உலகில் உங்களுக்கென்று வேறுபிரித்துக் கொண்ட தேவ பிதா ஆகையால் நீங்கள் என்னைக் குறித்து அக்கறைக் கொண்டுள்ளீர்கள் என்பதனை நான் அறிவேன். இன்றைய வசனத்தின்படி இன்னுமாக விசுவாசத்தோடு ஜீவிக்க என்னை நீங்கள் ஆசீர்வதியுங்கள். இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

“கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும்பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடனுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவராக;” (1 பேதுரு 5:10)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
09 ஞாயிறு

**உங்கள் வாயிலிருந்து உண்மையான வசனங்கள் மாத்திரம் புறப்படட்டும்!**

வேதவாசிப்பு
யோபு
அதி: 17 – 18

**"துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்; அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை."**
(ஏசாயா 53:9)

அருமையான தேவப் பிள்ளைகளே! ***ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் நிலைவரமான ஆவியில் நிரப்பி புதிய நாளில் வழி நடத்துமாறு வாழ்த்துகின்றேன்.*** எங்கள் தேவன் பரிசுத்த தேவனாகையால் அவரது பிள்ளைகளாகிய நாமும் எப்பொழுதும் பரிசுத்தமாக வாழ வேண்டுமென நினைத்து ***எங்கள் வாழ்க்கை சம்பந்தமான அனைத்து காரியங்களையும் குறித்து எப்பொழுதும் பரீட்சிக்கின்றார்.*** ஆனாலும் ***மனம் கலங்காதிருங்கள்!*** ஏனென்றால் நீங்கள் எப்போதும் தேவனின் முகத்தைப் பார்த்த வண்ணமாக பயணிப்பீர்களாயின் தேவன் உங்களுக்கு பாதைகளைத் தெளிவாகக் காட்டி பரிசுத்தமாக வாழ உதவி செய்வாராக!

தேவப் பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட ***ஏசாயா 53:9***இல் கூறப்படுகின்றதாவது ***"எங்கள் தேவனாகிய இயேசுகிறிஸ்து ஒரு போதும் அநீதியாக நடந்தும் கொடுமை செய்ததுமில்லை, வஞ்சனையான வார்த்தைகள் அவர் வாயிலே இருந்ததுமில்லை"*** என்றாகும். நாம் ஒவ்வொருவரும் இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தமான இரத்தத்தினால் கழுவி பரிசுத்தப் படுத்தப்பட்டுள்ளமையால் நாங்களும் இப்போது ***பரிசுத்த வாழ்க்கை வாழ வேண்டியது மிக அவசியம்.*** ஆகையால் உங்கள் வாயில் யாருக்கும் ஏதாவதொன்றைக் கூறினீர்களாயின் அவைகள் உண்மையானதும், சத்தியமானதும் மாத்திரமாகவே இருக்கட்டும். நீங்கள் ஆத்மீக சகோதரன் அல்லது சகோதரிக்கு அல்லது வேறொரு சகோதரிக்கு பொருத்தனை செய்வீர்களாயின் அதனை ***உங்கள் முழு உள்ளத்தோடு வெளிப்படுத்துங்கள்.*** இல்லாவிடின் ***உங்கள் பொய்யான வஞ்சனை கதைகள் காரணமாக மற்றுமொருவரின் உள்ளத்தை நீங்கள் அதிகமாக புண்படுத்துகின்றீர்கள்.***

தேவப் பிள்ளைகளே! பரிசுத்த வேதாகமத்தில் ***சங்கீதம் 15:4***இல் எழுதியிருப்பது, ***"ஆகாதவன் அவன் பார்வைக்கு தீழ்ப்பானவன் கர்த்தருக்குப் பயந்தவர்களையோ கனம் பண்ணுகிறான். ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறாதிருக்கிறான்"*** என்றாகும். இந்த வசனத்தின்படி எங்கள் வாயின் வார்த்தைகள் செய்கையில் காணப்பட வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றது. ஆகையால் இன்று முதல் உங்கள் கிரியைகளால் செயல்படுத்த முடிந்தவைகளை மாத்திரமே வார்த்தைகளால் வெளிப்படுத்த வேண்டுமென்பதை உள்ளத்தில் ஏற்றுக் கொள்ளுங்கள். உங்களால் செய்ய முடியாதவைகளை நான் செய்து தருகிறேன் என்று கூறாதீர்கள். இல்லாவிடின் அவர்களுக்கு அதை நான் முயற்சி செய்து பார்க்கிறேன் எனக் கூறுங்கள். இப்படியாக ***உண்மையை மாத்திரம் பேச உங்கள் நாவிற்கு இடம் கொடுங்கள். தேவனின் ஆசீர்வாதங்களைப் பெறுங்கள். வெற்றிகரமான நாள்!***

ஜெபம்

என் தேவனே! நீங்கள் மெய்யான தேவன் அப்படியே உங்கள் தேவமைந்தன் இயேசுகிறிஸ்து எப்போதும் உண்மையை மாத்திரம் பேசினார். அவரை எடுத்துக்காட்டாக எடுத்து எனக்கு வாழ உதவி செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"மாறுபாடான இருதயமுள்ளவன் நன்மையைக் கண்டடைவதில்லை; புரட்டு நாவுள்ளவன் தீமையில் விழுவான்." (நீதிமொழிகள் 17:20)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
10 திங்கள்

# எமது நெருக்கத்தின் கூப்பிடுதலை கேட்கும் தேவன்!


வேதவாசிப்பு
யோபு
அதி: 19 – 20

"எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, என் தேவனை நோக்கி அபயமிட்டேன்; தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார், என் கூப்பிடுதல் அவர் சந்நிதியில் போய், அவர் செவிகளில் ஏறிற்று." (சங்கீதம் 18:6)

பிரியமான தேவ ஜனங்களே! **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் சாந்தகுணமுள்ளவர்களாய் இப்பூமியை சுதந்தரித்துக் கொள்ளும்படியாக வாழ்த்துகின்றேன்.** எங்கள் பரலோக பிதாவானவர் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார் அது மிகவும் நன்றாயிருந்தது. ஆகையால் **தேவன் படைத்த ஏழு நாட்களும் நன்மையாக இருக்கின்றன.** ஆகையால் இன்றைய நாளும் உங்களுக்கு உரிமையான, நன்மையான நாள் என்பதில் எவ்வித சந்தேகமில்லை. ஆகையால் ***உள்ளம் கலங்காதீர்கள்!*** தேவனின் இராஜ்யத்திற்காக அர்ப்பணித்து ஊழியம் செய்கின்ற தேவ ஊழியர்களான எமக்கு மாத்திரமல்ல பூமியில்***வாசம் பண்ணும்*** உங்களுக்கு நன்மையானவைகளை பெற்றுத் தருகின்ற **பரலோக தேவனைக் குறித்து முழு உள்ளத்துடன் விசுவாசியுங்கள்.**

தேவப் பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட **சங்கீதம் 18:6**இல் தாவீது ராஜா கூறுவதாவது ***"எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு என் தேவனை நோக்கி அபயமிட்டேன் தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார் என் கூப்பிடுதல் அவர் சந்நிதியில் போய் செவிகளில் ஏறிற்று"***. என்றாகும். தேவப் பிள்ளைகளே! ***தாவீதின் தேவன் இன்றும் எங்களோடு ஜீவிக்கின்றவராக இருக்கின்றார்.*** அப்படியானால் தாவீது ராஜாவோடு இருந்ததைப் போல் எங்கள் நெருக்கத்திலே நாங்கள் தேவனை நோக்கி கூப்பிடுகையில் ***தேவன் தனது மாளிகையினின்று எங்கள் கூப்பிடுதலைக் கேட்கிறார். அதை நீங்கள் விசுவாசிப்பீர்களாயின் உங்கள் வாழ்வில் இந்த அநுபவத்தைப் பெற முடியும்.***

தேவப் பிள்ளைகளே! நீங்கள் வீட்டில் இருக்கும் வேளை உங்களுக்கு ஏதாவதொரு ஆபத்து இடம்பெற போகும் வேளை நீங்கள் அயல்வாசியினது அல்லது சொந்தக்காரது பெயர் சொல்லி கூப்பிடுகின்ற போது அவர்கள் ஓடிவந்து உங்களுக்கு உதவி செய்வார்கள். ஆனாலும் உங்கள் தேவன் அவ்வண்ணமாக உங்களை நோக்கி ஓடி வந்து உங்களுக்கு உபகாரம் செய்வதைக் காணமாட்டீர்கள். அவர் ***அரூபியாக கிரியை செய்யும் தேவன்.*** உங்கள் நெருக்கத்தின் போது **"இயேசுவே"** என்று கூப்பிடும் போது தரிசனமாக உங்கள் முன்னிலையில் நிற்க முடியாது. ***ஆகவே அவர் அரூபியாக உங்களோடிருந்து விரைந்து புதிதான பாதையின் மூலம் உபகாரம் செய்வார். ஜெயத்தின் நாள்!***


ஜெபம்

என் இயேசுவே! உங்கள் உரிமையான பிள்ளைகள் உங்களை நோக்கி கூப்பிடுகையில் நீங்கள் விண்ணுலகிலிருந்து கேட்டு அவைகளுக்கு பதில் தந்திடுவீர்கள். இன்றும் நீங்கள் எனது குரலுக்கு பதில் தாருங்கள். இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயெண்ணாமலும் அருவருக்காமலும், தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து, தம்மைநோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார்." (சங்கீதம் 22:24)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
11 செவ்வாய்

## பிரச்சினைகளுக்கு மத்தியில் உங்களுக்கு சமாதானத்தை தரும் தேவன்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 21 – 22

**"அவர்களுடைய இருதயகடினத்தினிமித்தம் அவர் விசனப்பட்டு, கோபத்துடனே சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்து, அந்த மனுஷனை நோக்கி: உன் கையை நீட்டு என்றார்; அவன் நீட்டினான்; அவன் கை மறுகையைப்போலச் சொஸ்தமாயிற்று."** (பரி.மாற்கு 3:5)

அருமையான தேவ ஜனங்களே! **இயேசுகிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள் உங்களுக்கு உரித்தாகட்டும்.** இன்றும் நீங்கள் தேவனின் பாதத்திலிருந்து **அவரை நோக்கி ஜெபித்து வழமையான காரியங்களை ஆரம்பித்தீர்களா?** அப்படியானால் நீங்கள் பயப்படாதீர்கள்! இன்றைய நாளில் **உங்களின் ஆசீர்வாதங்கள் குறைவில்லாமல் உங்களை நோக்கி கடந்து வரும்.** ஏனென்றால் தேவனை விசுவாசித்து அவரது வசனத்தை முழு உள்ளத்தோடு ஏற்று அதன்படி வாழ்வீர்களாயின் **உண்மையிலேயே நீங்கள் ஆசீர்வாதம் பெற்ற பிள்ளைகளாவீர்கள்.**

தேவப் பிள்ளைகளே! "உன்னதமானவருடைய வாயிலிருந்து தீமையும், நன்மையும் புறப்படுகிறதில்லையோ" என்று **புலம்பல் 3:38**இலும் **ரோமர் 8:28**இல் அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் **"தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்"** எனக் கூறப்பட்டுள்ளது. **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக! "தேவனுடைய அனுமதியில்லாமல் தலையில் ஒரு மயிர் கூட விழாது. ஏனெனில் உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டுள்ளதென" பரி.மத்தேயு 10:30**இல் காண்கிறோம். ஆகையால் எம் வாழ்வில் எங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய அனைத்து காரியங்களும் தேவனின் அனுமதியில்லாமல் நேரிடாது என்பதில் சந்தேகமில்லை.

தேவப் பிள்ளகைளே! மேலே கூறப்பட்டுள்ள பிரதான தேவ வசனத்தின்படி எங்கள் இயேசுகிறிஸ்து ஜெப ஆலயத்தில் பிரவேசித்த போது அங்கே **"சூம்பின கையையுடைய ஒரு மனிதன் இருந்தான். ஓய்வு நாளில் அவனைச் சொஸ்தமாக்கினால் அவர் பேரில் குற்றஞ்சாட்டலாமென்று அவர் மேல் நோக்கமாயிருந்தார்கள்."** அன்று ஓய்வு நாளாக இருந்தது. அவர் சூம்பின கையையுடைய மனுஷனை நோக்கி **"உன் கையை நீட்டு என்றார். அவன் நீட்டினான்."** அவன் கை மறுகையைப் போல சொஸ்தமாயிற்று. ஜெப ஆலயத்திலிருந்த மனிதர்கள் இயேசுவுக்கு விரோதமாக எழும்பிய போது அம்மனிதன் இயேசுவின் வசனத்திற்குக் கீழ்படியாமல் இருக்க முடியாது ஏதாவதொரு பிரச்சினை உருவாகுமோ என எண்ணி கையை நீட்டினான். நீங்களும் பிரச்சினைகள் மத்தியிலும் **தேவ சத்தத்திற்கு கீழ்படியுங்கள்.** உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும். **சமாதானத்தை தரும் சமாதானத்தின் நாள்!**



ஜெபம்

என் தேவனே! மனிதன் எதிர்பார்ப்புக்களின் மத்தியில் இயேசுவின் சத்தத்திற்கு கீழ்படிந்து ஆசீர்வாதம் பெறவும் வாழ்க்கையில் சமாதானம் பெறவும் எனக்கு உபகாரம் செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில்.

–ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் அழுது புலம்புவீர்கள், உலகமோ சந்தோஷப்படும்; நீங்கள் துக்கப்படுவீர்கள், ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்."
(பரி.யோவான் 16:20)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
**12** புதன்

## உங்களைப் போல் சிறியவருக்கு தீங்கு நேரிடுவதை விரும்பாத தேவன்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 23 – 24

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்த சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தில் அவனைத் தள்ளிப்போடுகிறது அவனுக்கு நலமாயிருக்கும்." (பரி.மாற்கு 9:42)

பிரியமான தேவ ஜனங்களே! ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் இணையற்ற வல்லமையான நாமத்தில் சுகத்துடனும், சமாதானத்துடனும் சந்தோஷமாகவும் வாழ வேண்டுமென இப்புதிய தினத்தில் வாழ்த்துகிறேன்.** இந்த ஜீவ மன்னா தினமஞ்சரியை வாசிக்கின்ற நீங்கள் சிறிய வயதான பிள்ளையாக இருப்பினும் ஜீவிக்கின்ற தேவனாகிய நமது இயேசு அளவற்ற அன்பு கொண்டிருக்கிறார். ஆகையால் சிறிய வயது, இளவயது என்று யாராலும் **உங்களை அழிக்க, தீமைக்குட்படுத்த இடமளிக்க தேவன் ஒரு போதும் உடன்படார்** என்பதனை **உள்ளத்தின் ஆழத்தில் பதித்துக் கொள்ளுங்கள்.** ஏனென்றால் எல்லா உயிர்களும் தேவனுக்கே சொந்தமானவைகள் தேவன் யாரையும் புறம்பே தள்ளுவதில்லை.

தேவப் பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட **பரி.மாற்கு 9:42**இல் எழுதியிருக்கிறதாவது, **"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ அவனுடைய கழுத்தில் எந்திரக்கல்லை கட்டி சமுத்திரத்தில் அவனைத் தள்ளிப் போடுகிறது நலமாயிருக்கும்"** என்றாகும். பெரியவர்களாக இருப்பினும் தேவனிடத்தில் விசுவாசம் கொண்டுள்ள சிறுபிள்ளையைப் போன்ற உள்ளத்தை உடையவர்கள் **"இப்படிப்பட்ட சிறு பிள்ளைகளில் ஒன்றை என் நாமத்தினால் ஏற்றுக் கொள்கிறவன் என்னை ஏற்றுக் கொள்கிறான். என்னை ஏற்றுக் கொள்கிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக் கொள்கிறான்"** என்றார் என **பரி.மாற்கு 9:37**இல் கூறப்பட்டுள்ளது.

சிறு பிள்ளைகளைப் போல் உள்ளத்தை மாற்றிக் கொண்டு பரிசுத்தமாக வாழ்பவர்களையே தேவன் ஏற்றுக் கொள்கின்றார். ஆகையால் இப்படியாக வாழ்கின்றவர்களுக்கு **"இடறலை உண்டாக்குகின்ற மனிதர்களை கழுத்தில் எந்திரக் கல்லைக் கட்டி சமுத்திரத்தில் அவர்களைத் தள்ளி போடுகிறது நலமாயிருக்குமென்று"** கூறுகின்றார். அத்தோடு **யாராவது இரட்சிக்கப்பட்டு விசுவாசத்தோடு தேவனுக்கு உகந்த வாழ்க்கையை வாழ்பவர்களுக்கு விரோதமாக விசுவாசத்தைக் கெடுக்க, இல்லாமலாக்கும்படியாக தீங்கு செய்யாதீர்கள்** என்று தேவன் கூறுகின்றார். எங்கள் தேவன் விசுவாசத்தின் இருப்பிடமாவார். எங்கள் விசுவாசம் பரீட்சிக்கப்படும்படியாக எதிர்பாராத வகையில் **துன்ப, துயரங்கள், சவால்கள்** ஏற்படும் சந்தர்ப்பங்களுண்டு. இப்படியான விசுவாசப் பரீட்சைகள் ஏற்படாத வண்ணம் **விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள். உங்களுக்கு வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் சிறுபிள்ளைகள் மேல் எவ்வளவாக அன்பாக இருக்கின்றீர்கள் என்பதை இன்று அறிந்துக் கொண்டேன். நான் உங்கள் முன்னிலையில் சிறு பிள்ளை அல்லவா? பிதாவே நீங்கள் என்னை பாதுகாத்துக் கொள்ளுங்கள். இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்குமுன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்." (எபிரேயர் 4:13)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
13 வியாழன்

## உங்கள் உள்ளத்தை மேன்மையாக எண்ணும் தேவன்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 25 – 26

**"ஒரு ஏழை விதவை அதிலே இரண்டு காசைப் போடுகிறதையும் கண்டு: இந்த ஏழை விதவை மற்றெல்லாரைப்பார்க்கிலும் அதிகமாகப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்."**
(பரி.லூக்கா 21:2,3)

தேவனுக்குள் அன்பான தேவப் பிள்ளைகளே! ஜீவனுள்ள **இயேசுவின் நாமத்தினால் சகல ஆசீர்வாதங்களிலும் நிறைப்பெற்று வாழும்படியாக இந்நாளில் வாழ்த்துகின்றேன்.** மேலே கூறப்பட்ட தேவ வசனத்தில் குறிப்பிடப்படுகின்றதாவது ஒரு முறை **ஏழை விதவை இரண்டு காசு (2 சதம்)** தேவ அலயத்தின் காணிக்கைப் பெட்டியில் போடுவதைக் கண்டு **இயேசுகிறிஸ்து அவளது அந்த காரியத்தின் நிமித்தம் பெரிதாக பாராட்டினார் என்பதையே.** தேவப் பிள்ளைகளே! இந்த ஏழைப் பெண் போட்ட 2 சதத்திற்காக இவ்வாறாக பாராட்டப்பட்டதேன்? **என நீங்கள் சிந்திக்கலாம்.**

தேவப் பிள்ளைகளே! பணக்காரர்கள் அநேகம் பேர் தேவனின் ஆலய காணிக்பை் பெட்டியில் காணிக்கைப் போட்டார்கள். ஆனாலும் இந்த **ஏழை விதவை தன்னிடமிருந்த 2 காசையும் போடுகிறதையும் கண்டு அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்துத் தேவனுக்கென்று காணிக்கை போட்டார்கள். "இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டு விட்டாள்"** என்றார். இதை இயேசுகிறிஸ்து **லூக்கா 21:4**இல் கூறியிருக்கிறார். ஆகையால் நீங்கள் தேவனின் இராஜ்யத்திற்காக காணிக்கைக் கொடுக்கும் வேளையில் **பெரிய தொகையை கொடுக்கிறேன். அதற்காக எனக்கு புகழ் கிடைக்குமென்பதை நினையாதீர்கள்.** ஏனென்றால் நீங்கள் தேவ இராஜ்யத்திற்காக கொடுக்கின்ற காணிக்கைகளை தேவன் மேன்மையாக எண்ணுவதோடு காணிக்கையின் எண்ணிக்கையல்ல **நீங்கள் முழு உள்ளத்தோடு கொடுக்கின்றீர்களா?** என்றே பார்த்துக் கொண்டிருக்கின்றார்.

தேவப் பிள்ளைகளே! மேற் கூறப்பட்ட **விதவை ஸ்திரீ தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் அதாவது 2 சதத்தை காணிக்கை பெட்டியில் போட்டாள்.** ஆனாலும் அவளுக்கு வாழ்வதற்கு எந்தவொரு வருமானமும், வழியும் இல்லாதிருந்தபடியால் வாழ்விலே இல்லாமை காரணமாக ஆண்டவரே உங்கள் இராஜ்யத்திற்கு எனது **2 சதம்** போதுமானதா? என்று நினைத்து காணிக்கைப் பெட்டியில் போடாமல்; வருமானத்திற்கான வழியைத் திறக்கும்படியாக வைத்திருக்கலாம். ஆனாலும் **அவள் அதையொன்றும் எண்ணாது அவள் முழு உள்ளத்தோடு தேவனுக்குக் கொடுத்தாள்.** நீங்கள் ஐசுவரியவானாக இருப்பினும், ஏழையாக இருப்பினும் உங்கள் உள்ளத்தை நிறுத்துப் பார்க்கின்றார். **நீங்கள் முழு உள்ளத்தோடும் விதைத்து அநேக ஆசீர்வாதங்களை உரிமையாக்கிக் கொள்ளுங்கள்!**

ஜெபம்

என் இட்சகராகிய இயேசுவே! நீங்கள் எங்கள் கரங்களையல்ல உள்ளத்தைப் பார்த்து எங்களை ஆசீர்வதிக்கின்றபடியால் ஸ்தோத்திரம்! முழு உள்ளத்தோடு உங்கள் இராஜ்யத்திற்காக விதைக்க கிருபை செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது; இந்த விஷயத்தில் மதியில்லாதவராயிருந்தீர்; ஆகையால் இதுமுதற்கொண்டு உமக்கு யுத்தங்கள் நேரிடும் என்றான்."
(2 நாளாகமம் 16:9)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
14 வெள்ளி

# தமது ஊழியக்காரரை உயர்த்தி உபசரிக்கும் தேவன்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 27 – 28

**"இதோ, என் ஊழியக்காரர் மனமகிழ்ச்சியினாலே கெம்பீரிப்பார்கள், நீங்களோ மனநோவினாலே அலறி, ஆவியின் முறிவினாலே புலம்புவீர்கள்."** (ஏசாயா 65:14)

அன்பான தேவப் பிள்ளைகளே! ஜீவனுள்ள **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் மகிழ்ச்சிகரமான நாளைப் பெற்று இயேசுவோடு கிட்டிச் சேர்ந்திருக்கும்படியாக வாழ்த்துகிறேன்.** உலகில் பலவகையான தொழில்கள் இருப்பினும் தேவ இராஜ்யத்தின் ஊழியங்களை செய்ய ஒருவருக்கு சந்தர்ப்பங்கிடைத்ததாயின் அது மிக அருமையானதொன்றாகும். ஏனென்றால் **தேவ இராஜ்யத்திற்காக ஊழியம் செய்ய பரலோகப் பிதா தனது சொந்த அபிப்பிராயத்தின்படி அழைக்கின்றார்** என்பது தேவனுடைய வசனத்திலேயே கூறப்பட்டுள்ளது.

தேவப் பிள்ளைகளே! தேவன் எரேமியா தீர்க்கதரிசிக்கு கூறுவதென்னவெனில் **எரேமியா 1:5இல் "நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன். நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம் பண்ணி உன்னை ஜாதிகளுக்கு தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன்."** என்று சொன்னார். ஆகையால் ஒரு சிறிய ஊழியம் நீங்கள் செய்வீர்களெனின் அது உங்களுக்குக் கிடைத்த பாக்கியம் என்றும், அது **தேவனிடமிருந்தே உங்களுக்குக் கிடைத்தது என்று விசுவாசியுங்கள்.** அல்லாமலும் நீங்கள் ஒரு ஊழியமும் செய்யவில்லையெனினும் **நற்செய்தி கூறுவது உங்கள் தலையாய கடமையென ஏற்று அதை நிறைவேற்றுவதில் தீவிரமாக செயல்படுங்கள். வெளிப்படுத்தல் முதலாம் அதிகாரம் 6ம்** வசனத்தில் **"நம்மிடத்தில் அன்பு கூர்ந்து தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும், வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக!"** என்று எழுதப்பட்டுள்ளது.

தேவப் பிள்ளைகளே! ஆகையால் தேவனின் பிள்ளையான நீங்கள் முடிந்தளவு **உங்கள் வாழ்வில் நீங்கள் தேவனிடம் பெற்ற ஆசீர்வாதங்கள், நன்மைகள் என்பவற்றை மற்றவர்களுக்கு கூற முயற்சி செய்யுங்கள்.** உங்கள் வாழ்வின் சாட்சிகளை பகிர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் தேவனுக்கு பிரியமான காரியங்களை அவருடைய சித்தத்தை இப்பூமியில் நிறைவேற்றும்படியாக செயல்படுகின்ற வேளை தேவன் உங்களைக் குறித்து **மகிழ்ச்சியடைந்து உங்கள் வாழ்வின் அனைத்து காரியங்களையும் சரியான நேரத்தில் நிறைவேற்றுவார். ஏற்ற நேரத்தில் உயர்த்தவும் தவறமாட்டார்.விசுவாசத்தோடு பயணம் செய்யுங்கள் வெற்றிச் சிறந்த நாள்**

ஜெபம்

என் இயேசுவே! உங்களுக்குச் சொந்தமான ஊழியக்காரர்களைக் குறித்து உபசரிக்கின்ற தேவனாவீர்கள். உங்கள் சொந்த பிள்ளைகளாகிய எங்களை ஆசாரியர்களாக நியமித்துள்ளீர்கள். எனக்கும் அத்தகைய பொறுப்பை செய்து முடிக்க ஆசீர்வதியுங்கள்! இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்; உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய்; இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்தரமும், என்னாலுண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறதென்று கர்த்தர் சொல்லுகிறார்." (ஏசாயா 54:17)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
15 சனி

## மகிமையின் கர்த்தரே உங்களை அழைத்தவராவார்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 29 – 30

**"கர்த்தருடைய நாமத்திற்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள்; பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்."**
(சங்கீதம் 29:2)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற தேவன் இயேசுகிறிஸ்துவின் கிருபை நிறைந்த நாமத்தில் ***இப் புதிய தினத்தின் இதமான காலைப் பொழுதினிலே காரியங்கள் யாவும் வாய்க்கும், தடைகள் யாவும் மாறிடும் நல்ல நாளாக அமையும்படி பிரார்த்திக்கின்றேன்.*** இப் புவியில் வாழும் சகல மாந்தர்களும் பரலோகத்தில் வாசம் பண்ணும் ஜீவனுள்ள தேவ பிதாவை பற்றி அறிவது மிக நன்மையே. ஏனெனில் ***வானத்தையும், பூமியையும்*** படைத்த பரலோக தகப்பனைக் குறித்து அறிந்தவர்களாய் இருந்தால் அவர்கள் **பாக்கியசாலிகளே!** ஏனெனில் அவராலேயே ***உலகில் யாவும் உருவானது என்றும், அவராலேயே உலகில் யாவும் நிகழ்கின்றது என்பதையும் நன்கு அறிவார்கள்.***

பிள்ளைகளே! தேவன் தாமே ஜீவனுள்ளவராய் கிரியை செய்கிறவராய் இருக்கிறார் என்பதை மனிதர்கள் அறியும்படியாக ***அவருடைய ஏகபுத்திரன் இயேசுகிறிஸ்துவுக்கூடாய் வல்லமையான செயல்களை, அற்புதங்களை, அதிசயங்களை நடத்துகிறார்.*** ஆயினும் அநேகர் அவருடைய புதுமையான செயல்களையும், அற்புதங்களை ஆசீர்வாதமான கிரியைகளையும் கண்டும் அவைகளை கருத்தில் கொள்ளாது, விளங்காதவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் அவற்றைக் கண்டும் காணாதவர்களாய் வாழ்கிறார்கள். அதே போல் ***இயேசுஸ்வாமியின் கிரியைகளை கேட்கிறவர்களும் கேளாதவர்களைப் போல் காட்சியளிக்கிறார்கள்.*** ஆயினும் கர்த்தருடைய சொந்த விருப்பத்தின் பேரில் அழைக்கப்பட்டவர்களாகிய அவரது சொந்த ஜனங்கள் அவர் ஜீவனுள்ள தேவன் என காணும்படியாக ***தேவ அநுக்கிரகம் அவர்களை நோக்கி வருகிறது.***

தேவப் பிள்ளைகளே! **பரி.பவுல்** அடிகளார் பிலிப்பி என்னும் பட்டணத்தில் "ஓய்வு நாளில் வழக்கமாய் ஜெபம் பண்ணுகிற இடத்திலே உட்கார்ந்து அங்கே கூடி வந்த ஸ்திரிகளுக்கு உபதேசித்துக் கொண்டிக்கும் போது லிதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரி கேட்டுக் கொண்டிருந்தாள். ***"பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார்."*** என்பதாக தேவ வார்த்தை ***அப்போஸ்தலர் 16:14***இல் எழுதப்பட்டிருக்கிறது. அதே போல் இன்றும் ஒரு சிலராவது தேவனிடத்தில் வருவார்களேயானால் அதுவும் தேவ அநுக்கிரகமே யல்லாது வேறு ஒன்றும் இல்லை என்பது தெளிவாகிறது. மேலே கொடுக்கப்பட்ட இன்றைய தலைப்பு திரு வசனமான ***சங்கீதம் 29:2***இன்படி ***"கர்த்தருடைய நாமத்திற்குரிய மகிமையை அவருக்கு செலுத்துங்கள். பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள்."*** ஏனெனில் உங்களை தம்மிடமாய் அழைத்துக் கொண்டவரான பரலோக தேவனானவர் ***உன்னதமானவரும், மகத்துவமுள்ளவரும், பரிசுத்தரும், நீதிமானுமான ஜீவனுள்ள தேவனாக இருக்கிறார். தேவ அநுக்கிரகத்தின் நாள்!***

ஜெபம்

என் அன்பின் தேவனே! என்னை அழைத்தவரே நீங்கள் ஜீவனுள்ள தேவன் என அறிந்துக் கொள்ளும்படி செய்தவரே நன்றி! உன்னதமானவரே உம்மை மகிமைப்படுத்தும்படியாய் என்னை ஆசீர்வதித்தருளுமாறு ஜீவனுள்ள தேவன் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்; ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன்."
(சங்கீதம் 46:10)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
16 ஞாயிறு

உங்கள் விசுவாசமே
தேவ வார்த்தைகளைக்
கிரியையில் நடப்பிக்கும்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 31 – 32

**"அதற்காக அவரைப் பார்த்து நகைத்தார்கள். எல்லாரையும் அவர் வெளியே போகப்பண்ணி, பிள்ளையின் தகப்பனையும் தாயையும் தம்மோடே வந்தவர்களையும் அழைத்துக்கொண்டு, பிள்ளையிருந்த இடத்தில் பிரவேசித்து,"** (பரி.மாற்கு 5:40)

அன்பார்ந்த தேவப் பிள்ளைகளே! **தேவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தால் இன்றும் உங்களுக்கு நல்ல நாளாகும்படி வாழ்த்துகின்றேன்.** நான் ஒவ்வொரு நாளும் தவறாது உங்களுக்கு நல்ல நாளாக அமையும்படி வாழ்த்துவதே என் பழக்கமாகிவிட்டது. என எண்ணாதிருங்கள். ஏனெனில் அனுதினமும் ஆண்டவருடைய முகத்தை தேடுவோமாகில், தேவ வசனத்தின்படி வாழ்வோமாகில், அவைகளை கற்றறிந்து எம் வாழ்க்கைப் பாதையை மாற்றி அமைத்துக் கொள்வோமாகில், எமக்கு கிடைக்கும் சகல தருணங்களிலும் பரலோக இராச்சியத்தைக் குறித்த காரியங்களை **முழு உள்ளத்தோடு செய்வோமாகில் நாம் நினைப்பதை பார்க்கிலும் அதிகமாய் தேவன் எம்மை ஆசீர்வதிப்பார்.** அப்போது எல்லா நாட்களும் நல்ல நாளாகும்.

தேவப் பிள்ளைகளே! மேலே கொடுக்கப்பட்ட திருவசனம் **பரி.மாற்கு 5:40,41**இல் எழுதப்பட்டிருக்கிறது. "**ஜெப ஆலயத் தலைவர்களில் ஒருவனாகிய யவீருவினுடைய பன்னிரண்டு வயதுள்ள ஒரே குமாரத்தி மரண அவஸ்தைபடுகிறாள் அவள் ஆரோக்கியமடையயும்படியாக அவர் தமது இல்லத்திற்கு வர வேண்டும்.**" என வேண்டிக் கொண்டதன் பிரகாரம் இயேசுகிறிஸ்து அவனது இல்லத்திற்குச் சென்றார். அச் சிறு பெண்ணை குணமாக்கும் பொருட்டு அந்த வீட்டை நோக்கி சென்றார் என்பதாகவும். செல்லும் வழியில் சிலர் வந்து உம்முடைய குமாரத்தி மரித்துப் போனாள் இனி ஏன் போதகரே வருத்தப்படுகிறீர்? என்றார்கள். ஆயினும் இயேசுகிறிஸ்து **அவ் வார்த்தைகளை கேட்டவுடனே ஜெப ஆலயத் தலைவனை நோக்கி பயப்படாதே விசுவாசமுள்ளவனாயிரு இரு** என்றார். ஜெப ஆலய தலைவன் வீட்டில் அழுது புலம்புகிறவர்களைக் கண்ட இயேசுகிறஸ்து அவர்களை நோக்கி நீங்கள் சந்தடிப்பண்ணி அழுகிறதென்ன **பிள்ளை மரிக்கவில்லை நித்திரையாயிருக்கிறாள் என்றார்.**

தேவப் பிள்ளகைளே! **பரி.மாற்கு 5:40**இன்படி அதற்காக "**அவரைப் பார்த்து நகைத்தார்கள். அவர் யவீருவின் பிள்ளையிருந்த இடத்தில் பிரவேசித்து சிறு பெண்ணே எழுந்திரு என்று கையை பிடித்து கூறினார்.**" உடனே சிறு பெண் எழுந்து நடந்தாள். **பரி.மாற்கு 5:42**இல் நீங்களும் தேவனுடைய வார்த்தைகளை விசுவாசித்து தேவனை நோக்கி ஜெபியுங்கள். உங்கள் நாவினால் விசுவாச அறிக்கை செய்யுங்கள். திருவசனங்களை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தும் போது நீங்கள் **தேவ ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்வீர்கள். ஆசீர்வாதமான நாள்!**

ஜெபம்

எனது அன்பு தேவனே! உங்கள் வாயின் வார்த்தைகள் யாவும் இன்றும் கிரியை செய்கிறபடியால் நன்றி! உங்கள் வார்த்தைகளின்படி நான் ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ளும்படியும் எனக்குள் விசுவாசம் பெருகும்படியும் கிரியை செய்யுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களை-யெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள்."
(எபேசியர் 6:16)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
17 திங்கள்

# தேசத்திலே சுகமாய் வாழவைக்கும் நித்திய தேவன்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 33 – 34

**"...வில்லையும் பட்டயத்தையும் யுத்தத்தையும் தேசத்திலே இராதபடிக்கு முறித்து, அவர்களைச் சுகமாய்ப் படுத்துக் கொண்டிருக்கப்பண்ணுவேன்."**
(ஓசியா 2:18)

என் அன்பு தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ***இன்றைய நாள் நல்ல நாளாக விளங்கும்படி வாழ்த்துகின்றேன்.*** உங்கள் கர்த்தராகிய ஆண்டவர் தேசத்திலே யுத்தங்களை ஓயப் பண்ணி சுகமாய் வாழும்படி ஆசீர்வதிக்கிறவராக இருப்பதால் நீங்கள் மிக ***அதிர்ஷ்டசாலிகளாவீர்கள்!*** அவருடைய தேவ வசனம் ***ஏசாயா 32:18***இல் இப்படியாக கூறுகிறது ***"என் ஜனம் சமாதான தாபரங்களிலும் நிலையான வாசஸ்தலங்களிலும் அமைதியாகத் தங்கும் இடங்களிலும் குடியிருக்கும்"*** என்பதாக. ஆகவே ***உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!***

தேவப் பிள்ளைகளே! உங்களை அழைத்த பரலோகத்தில் வாசம் பண்ணும் தேவ பிதாவானவர் ***உங்கள் மீது அளவில்லா அன்பு உடையவராக காணப்படுகிறார்.*** அதே போல் அவர் உங்கள் மீது காட்டும் கிருபை, இரக்கம் இவைகளும் அளவு கடந்தவைகள் என்பதை மேலே தரப்பட்ட தேவ வசனத்தில் விஷேசமாய் அறியக் கூடியதாயிருக்கிறது. ***வில்லையும், பட்டயத்தையும், யுத்தத்தையும் தேசத்திலே இராதபடிக்கு முறித்து*** அவர்களை சுகமாய் படுத்துக் கொண்டிருக்கப் பண்ணுவேன் என்பதையே. உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் மாத்திமல்ல நீங்கள் வாழும் பிரதேசத்தில், கிராமத்தில், பட்டணத்தில் அல்லது நகரத்திலோ, தேசத்திலோ எங்கேயாயினும் ***நீங்கள் ஜீவிக்கும்படியான தகுந்த சூழ்நிலை இருப்பது மிக அவசியமல்லவா?*** அப்படியில்லாது போனால் உங்களால் சுகமாய் வாழ முடியாதல்லவா? உதாரணமாக ஒரு காரணத்தை பார்ப்போம் கடந்த காலங்களில் எங்கள் நாட்டில் யுத்த கலவரத்தின் போது இலங்கையர்களாகிய ***நாங்கள் பயத்துடனும், மிகவும் கலக்கத்துடனும் ஜீவித்து வந்தோம்*** என்பதை இவ் வேளையில் அதை திரும்பவும் நினைத்துப் பாருங்கள்.

தேவப் பிள்ளைகளே! தேவனுடைய கிருபை எம் தேசத்தின் மீது இறங்கி வந்ததன் நிமித்தம் ***இலங்கையில் யுத்தம் நிறுத்தப்பட்டது. நாமனைவரும் சுகமாய் வாழ்கிறோம்.*** இன்னுமாக எம் ஆண்டவர் ***ஏசாயா 32:17***இல் கூறுகிறார். ***"நீதியின் கிரியை சமாதானமும் நீதியின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம்"*** என்று. ஆகையால் அவருடைய பிள்ளைகளாகிய நாமனைவரும் தமது வழிகள் யாவற்றிலும் நீதிமான்களாய் ***தேவனுக்கு உகந்தபடி ஜீவித்து அவரை நோக்கி ஜெபம் செய்யும் போது அவர் சகல விண்ணப்பங்களையும் தேவன் தாமே கேட்டு அவற்றிற்கு பதில் தருவார்.*** ஏனெனில் எம் தேவன் நீதியுள்ளவராய் இருக்கிறார். அவரது சொந்த ஜனங்கள் நீதிமான்களாக அவர் முன்பாக முறையிட்டு விண்ணப்பிக்கும் போது ***அவர்கள் சுகமாய் ஜீவிக்கும்படியாக அவர்களை ஆசீர்வதிப்பார். ஜெயம் தரும் நாள்!***

ஜெபம்

என் தேவனாகிய கர்த்தாவே! நீங்கள் எம்மீது அளவில்லா அன்புள்ளவராக இருப்பதால் நன்றி! நீங்கள் எம் தேசத்திலே நடந்துக் கொண்டிருந்த யுத்த கலவரங்களை நீக்கியபடியால் நாம் சுகமாய் வாழ்கிறோம். இன்றும் நீங்கள் எம்மோடிருந்து எமக்கு தேசத்திலே சுகமாய் வாழ ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன்; நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லையென்று உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றார்." (ஆமோஸ் 9:15)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
**18** செவ்வாய்

## வீணாண வார்த்தைகளைக் குறித்து கவனமாயிருங்கள்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 35 – 36

**"மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."** (பரி.மத்தேயு 12:36)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்துவின் ஜீவனுள்ள நாமத்தினால் **இன்றைய நாளும் நல்ல நாளாக அமையுமாறு வாழ்த்துகின்றேன்.** உலகில் சகல ஜாதிகளின் மத்தியில் தம்முடைய சொந்த ஜனங்களாக எம்மை தெரிந்துக் கொண்ட ஜீவிக்கின்ற தேவன் இயேசுகிறிஸ்து இன்றும் எமது ***சகல காரியங்களையும் குறித்து மிகுந்த அக்கறையுள்ளவராகவும், கவனிப்பவராகவும் இருக்கிறார்.*** ஆகையால் எம்மீது அளவற்ற அன்புக் கொண்டவரான ஆண்டவருடைய உள்ளம் துக்கப்படாமல் ***அவரது விருப்பம் போல் ஜீவிக்கிறவர்களாக முற்படுவோம்.*** ஏனெனில் உலக மனிதர்களுக்கு நாம் தேவனுடையவர்கள் என்பதை உறுதிப்படுத்த முன்மாதிரியாக நடப்பவர்களாக இருக்க ***கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம்.***

தேவப் பிள்ளைகளே! இன்றைய காலை ஜெப வேளையில் என்னை உம்மைப் போல் மாற்றிடுங்கள் இயேசப்பா என்று ஜெபித்தீர்களா? அப்படியாயின் ***அவர் உங்களை தம்மைப் போல் மாற்றும்படியாக கிரியைச் செய்வார்.*** ஆகையால் ***உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!*** இன்றைய தினம் எமது தலைப்பு வசனத்தின்படி தேவ பிள்ளைகள் மாத்திரமல்ல ***உலக வாழ் மக்கள் யாவருமே தமது வாயினால் பேசிய சகல வீணாண வார்த்தைகளுக்கும் நியாயத்தீர்ப்பின் நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும்.*** தேவப் பிள்ளைகளே! உங்கள் வாயின் வார்த்தைகள் கிரியை செய்கிறபடியால் நீங்கள் நாவினால் சொல்கிற சகல வார்த்தைகளும் நன்மையை உண்டு பண்ணுவதாக அமையட்டும். பரி.வேதாகமத்திலே இன்னுமொரு வார்த்தை ***நீதிமொழிகள் 18:21*** இல் ***"மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும் அதில் பிரியப்படுகிறவர்கள் அதன் கனியைப் புசிப்பார்கள்"*** என்று வெளிப்படுத்துகிறது.

தேவப் பிள்ளைகளே! உங்கள் வாயின் வார்த்தைகள் நல்லதாக இருந்தால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ***உங்கள் வாழ்க்கையிலும் நல்ல, நன்மையான சவுகளை அளிப்பார்.*** இன்றைய தினத்திலும் உங்கள் வாயினால் மற்றவர்களுக்கு இயேசுகிறிஸ்துவை பற்றி அறிவிப்பீர்களாயின் அவர்கள் இயேசுகிறிஸ்துவை அறிந்து ஏற்றுக் கொண்டு ***அவர் சமுகத்தில் வந்து ஆசீர்வாதம் பெறுவார்களாயின் அவர்கள் நிமித்தம் நீங்களும் உங்கள் வாழ்க்கையில் பலத்த ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளவீர்கள்.*** ஆனால் நீங்கள் வீணாண வார்த்தைகளை பேசி காலத்தை கடத்தியிருந்தால் உங்கள் வாழ்விலே ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள முடியாது. வீணான வார்த்தைகள் நிமித்தம் ***நியாய தீர்ப்பின் நாளிலே நீங்கள் குற்றவாளியாக நியாயத்தீர்க்கப்படுவீர்கள்.*** ஆகையால் இன்றிலிருந்து நீங்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தைகளையும் குறித்து கவனமாயிருங்கள். விஷேசமாக ***நாவின் வார்த்தைகளை குறித்து மிகக் கவனமாகவும், அவதானமாகவும் இருப்பது மிக அவசியம். ஆசீர்வாதமான நாள்!***

**ஜெபம்**

அன்பின் பரலோக தேவனே! என் வாயின் வார்த்தைகளையும், வீண் பேச்சுகளையும் பேசுவதைத் தடுத்து நல்லவைகளை, பிரயோஜனமானவைகளை பேசவும் எனக்கு தயை புரிந்தருளுங்கள். மறுபடியும் என் வாழ்வினை ஆசீர்வதிக்கும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

**வேத வாக்குத்தத்தம்**

"சொற்களின் மிகுதியில் பாவமில்லாமற்போகாது; தன் உதடுகளை அடக்குகிறவனோ புத்திமான்."
(நீதிமொழிகள் 10:19)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
19 புதன்

ஆவியோடு தம்மைத் தேடுபவர்கள் மீது தேவன் மிகப் பிரியமாயிருக்கிறார்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 37 – 38

"அவன் நம்முடைய ஜனத்தை நேசிக்கிறான், நமக்கு ஒரு ஜெபஆலயத்தையும் கட்டினான் என்றார்கள்." (பரி.லூக்கா 7:5)

அன்பார்ந்த தேவப் பிள்ளைகளே! ஜீவிக்கின்ற தேவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் **இன்றைய நாள் ஜெயத்தின் நாளாக அமையும்படி வாழ்த்துகின்றேன்.** எங்கள் மீட்பராகிய இயேசுகிறிஸ்து எம்மீது அளப்பரிய அன்பு கொண்டுள்ளார். அவர் எம் பெலவீனத்தில், குறைபாடுகளில் **எம் பக்கமாயிருந்து உதவி ஒத்தாசைகள் செய்வார்.** மேலே கொடுக்கப்பட்ட வேத வசனம் இப்படியான ஒரு சந்தர்ப்பத்தையே குறிப்பிடுகிறது.

தேவப் பிள்ளைகளே! **பரிசேயர்கள், வேதபாரர்கள், யூதர்கள்** தம் முன்னோர்களின் பாரம்பரியத்தைக் கைக் கொள்கிறவர்களாயும், காக்கிறவர்களாயும் இருந்தார்கள். ஓர் பாரம்பரிய ஆகாரத்தைக் கைக் இப்படியான அநேக ஆசாரங்களை கைக்கொண்டு வந்தார்கள். இது போல் ஒரு நாள் இயேசுவிடம் அவர்கள் வந்த போது அவருடைய சீஷரில் சிலர் **கழுவாத அசுத்த கைகளாலே போஜனம் பண்ணுகிறதை அவர்கள் கண்டு குற்றம் பிடித்தார்கள்.** அப்போது அந்தப் பரிசேயரும், வேதபாதகரும் அவரை நோக்கி உம்முடைய சீஷர்கள் முன்னோர்கள் பாரம்பரியத்தை மீறி **கை கழுவாமல் சாப்பிடுகிறார்கள்** என்று கேட்டார்கள். அதற்கு மறு உத்தரவு அருளும்படியாக ஆண்டவர் இயேசு அவர்களை நோக்கி **நீங்கள் எல்லாரும் எனக்குச் செவி கொடுத்து உணருங்கள்.** மனுஷனுக்குப் புறம்பேயிருந்து அவனுக்குள்ளே போகிறதென்றும் அவனைத் தீட்டுப்படுத்தாது அவன் உள்ளத்திலிருந்து புறப்படுகிறவைகளே **அவனைத் தீட்டுப்படுத்தும்.**

தேவப் பிள்ளைகளே! இயேசுகிறிஸ்து எம்மிடம் எதிர்பார்ப்பது, பாரம்பரிய ஆசாரத்துக்குரியதுமான, சம்பிரதாயத்துக்குரியதுமான பக்தியோடு அவரை அணுகாதபடி **முழு இருதயத்தோடும், உள்ளார்ந்த அன்போடும் அவரண்டையில் வர வேண்டும் என்பதையே ஆகும்.** எனினும் இஸ்ரவேலரிடம் கைக்கழுவுதல், கால்கழுவுதல், **சிரசில் எண்ணெய்** வைப்பது, இல்லத்திற்கு வருகை தருபவர்களை முத்தமிட்டு கழுவி வரவேற்பது, இது போன்று இன்னும் அநேக பக்திக்குரிய ஒழுக்க முறைகள், நடைமுறையில் இருந்து வந்தது. இதைக் கண்ட இயேசுகிறிஸ்து இவைகள் அனைத்திலும் மேலாய் "**முழு ஆத்துமாவோடும், முழு இருதயத்தோடும் தேவ பிதாவானவரின் முகத்தை தேடுவது மிக அருமையான முக்கியமான காரியம் என்று வெளிப்படுத்தினார்.**" இப்படியாக அவரை நீங்களும் முழு உள்ளத்தோடும், ஆவியோடும் அவரது முகத்தை தேடுவீர்களேயானால் அவர் உங்கள் மீது பிரியமாயிருந்து **உங்களுக்கு அளவற்ற ஆசீர்வாதங்களை அருளுவார். வெற்றியின் நாள்!**

ஜெபம்

என் அன்பின் இயேசுவே! உங்கள் மகன் இயேசுகிறிஸ்துவுக்கூடாக மகிமையடைந்திருந்த எம்மை உமக்கென்று அழைத்தவரே நன்றி! தேவனே சம்பிரதாயபூர்வமாக அல்ல ஆவியோடும் முழு உள்ளத்தோடும் உம்மைத் தொழுது கொள்ள உம்மண்டையில் வருவதற்கு கிருபை செய்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"அத்தருணத்தில் அவருடைய சீஷர்கள் வந்து, அவர் ஸ்திரீயுடனே பேசுகிறதைப்பற்றி ஆச்சரியப்பட்டார்கள். ஆகிலும் என்ன தேடுகிறீரென்றாவது, ஏன் அவளுடனே பேசுகிறீரென்றாவது, ஒருவனும் கேட்கவில்லை."
(பரி.யோவான் 4:23)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
**20** வியாழன்

# பரலோகத்திலிருந்து ஒத்தாசை அனுப்பி இரட்சிக்கும் தேவன்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 39 – 40

**"என்னை விழுங்கப்பார்க்கிறவன் என்னை நிந்திக்கையில், அவர் பரலோகத்திலிருந்து ஒத்தாசை அனுப்பி, என்னை இரட்சிப்பார்;... "**
(சங்கீதம் 57:3)

அருமையான தேவ பிள்ளைகளே! பாசமிக்க என் அருமையான தேவப் பிள்ளைகளே! ஜீவனுள்ள தேவனாகிய ***இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினால் இந்நாள் மகிழ்ச்சிக்குரிய நாளாய் அமையும்படி வாழ்த்துகின்றேன்.*** நீங்கள் தேவனுடைய சொந்தப் பிள்ளைகளானபடியால் அவருடைய திரு வசனங்களை வாசித்தறிந்து விளங்கிக் கொள்ளும்படியான வரப்பிரசாதம் பெற்றிருக்கிறீர்கள். ஆகவே ***நீங்கள் அதிரஷ்டசாலியாய் இருக்கிறீர்கள்.*** இன்னும் "***ஜீவ மன்னா***" தினசரி ஏட்டின் மூலம் நாள்தோறும் ஆத்தும போசணையைப் பெறும் ***நீங்கள் அதிரஷ்டசாலியே*** என நான் கூறுகிறேன்.

தேவப் பிள்ளைகளே! நீங்கள் ஆண்டவருக்கு சொந்தமானவர்களாய் இருப்பதால், உங்கள் வாழ்வினை முழுவதுமாக அவருக்கே அர்ப்பணித்து விடுங்கள். ***உங்கள் உள்ளம், யோசனை, சிந்தனை எதிர்கால திட்டங்கள், எதிர்கால வாழ்வு எல்லாவற்றையும் ஆண்டவருக்கே கையளியுங்கள்.*** அன்றாட வாழ்வின் சகல காரியங்களையும் நீங்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை யாவற்றையும் ***தேவனுடைய கரங்களில் ஒப்படையுங்கள்.*** அவர் உங்களுக்கு காட்டும் முறையில் முகம் கொடுக்க வேண்டிய எல்லா பிரச்சினைகள், பாடுகள், உபத்திரவங்கள், நெருக்கங்கள், சவால்கள் போன்ற சகலவற்றையும் ***ஆண்டவரிடம் ஒப்புக் கொடுத்து அவரிடமே அவற்றிற்கான பதிலையும் விடுதலையையும் எதிர்பாருங்கள்.*** அதே போல் அவரிடமிருந்து நீங்கள் பெறும் சகல ஆசீர்வாதங்களுக்காக அவரை ஸ்தோத்தரித்து துதியுங்கள்.

தேவப் பிள்ளைகளே! பிரதான வசனம் மேலே கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது ***சங்கீதம் 57:3இல் "என்னை விழுங்கப் பார்க்கிறவன் என்னை நிந்திக்கையில் அவர் பரத்திலிருந்து ஒத்தாசை அனுப்பி என்னை இரட்சிப்பார்."*** தேவன் தமது கிருபையையும் தமது சத்தியத்தையும் அனுப்புவார் என்று தாவீது ராஜா பாடின சங்கீதத்தில் ஓர் வாக்கியமாகும். அதன் ஆரம்பத்தில் எழுதப்பட்டிருப்பதன்படி பார்த்தால் ***இஸ்ரவேலின் முதல் ராஜாவாகிய சவுல் தாவீது மீது பொறாமை கொண்டவனாய் அவனை அழிக்கும்படியாக கொலை முயற்சிகளை மேற் கொண்ட வேளையில் அதிலிருந்து விடுதலையடைந்து தேவனை நோக்கி துதித்தே இச் சங்கீதம் என்பதை அறியலாம். தாவீது இப்படியாக நடந்திருக்கலாம்.*** எங்களுக்கு அப்படி நேரிடுவதில்லையே என எண்ணாதிருங்கள். "***உங்கள் ஆத்துமீக வாழ்விற்கு விரோதமாக உங்களை விழுங்க காத்திருக்கும் சாத்தானை நீங்கள் அறியவில்லையா***" என ***1பேதுரு 5:8*** கூறுகிறது. ஆகவே தாவீது போல் தேவனுக்கு உகந்தபடி ஜீவித்து பரத்திலிருந்து ***உதவி ஒத்தாசைகளை பெறுங்கள். தேவ அநுக்கிரகத்தின் நாள்!***

ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே இயேசு சுவாமி தாவீதின் தேவனுமானவரே! தாவீது ராஜாவிற்கு பரத்திலிருந்து அருள் புரிந்தவரே எதிரிகளிடமிருந்து காத்தவரே! அதே போல் எனக்கு விரோதமாய் செயல்படும் சாத்தானின் கிரியைகளிலிருந்து என்னை விடுவித்து காத்தருளும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார்; அவருடைய ராஜரிகம் சர்வத்தையும் ஆளுகிறது." (சங்கீதம் 103:19)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
21 வெள்ளி

# நம்பிக்கைக்கு உரியவரான நம் ஆண்டவர்!


வேதவாசிப்பு
யோபு
அதி: 41 - 42

**"தேவனை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன்; தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்;..."** (சங்கீதம் 56:4)

தேவனுக்குள் பிரியமான தேவப் பிள்ளைகளே! ஜீவனுள்ள தேவன் **இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இத் தினமும் நல்ல நாளாக இருக்குமாறு வாழ்த்துகிறேன்.** இலங்கையில் வாழும் ஜனங்கள் மத்தியில் அனேகர் தம் வாழ்க்கையில் மிக வித்தியாசமான, பயங்கரமான, கடினமான அனுபவங்களுக்கு முகம் கொடுத்து, **அநேக சவால்களுக்கு, துன்பங்களுக்கு, மத்தியில்** தம் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் **ஆத்துமீகர்களாகிய** நாங்கள் எங்கள் தேவனாகிய ஆண்டவரையே **நம்பி விசுவாசித்து,** எம் சகல மாக்கங்களையும் அவருடைய வார்த்தைகளின்படி சீர்படுத்தி, குற்றமற்ற மனசாட்சியுள்ளவர்களாய், வாழ்வோமாகில் எங்கள் வாழ்விற்கு **தேவையான சகல ஆசீர்வாதங்களும் எம்மை நோக்கி ஏற்ற வேளையில் வந்தடையும் என்பதில் சந்தேகமேயில்லை.**

தேவப் பிள்ளைகளே! ஆகையால் உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! **என் ஆத்துமீக வாழ்விலே கடந்த பதினெட்டு வருடங்கள் என் தாய் சபையில் தேவ சேவையில் ஈடுபட்டிருந்தேன்.** அந்த பதினெட்டு வருடங்களிலும் ஒரு நாளாவது ஏன் ஆண்டவரே என்னை இப்படியே வைத்திருக்கிறீர்கள் என தேவனுக்கு முன்பாக முறையிட்டதில்லை. எந்நேரமும் நன்றி செலுத்தி **அவரையே விசுவாசித்து என் காரியங்கள் யாவையும் மனமகிழ்ச்சியுடன் செய்து வந்தேன்.** என் எதிர்காலத்தைக் குறித்தோ, என் பிள்ளைகளின் எதிர்காலத்தைக் என் ஊழியத்தின் எதிர்கால வளர்ச்சியைக் குறித்தோ நினைத்து ஒரு பொழுதும் **கவலையடைந்ததில்லை.**

தேவப் பிள்ளைகளே! ஏற்ற வேளையில் என்னை அவர் என் தாய் சபையை விட்டு வெளியே கொண்டு வந்தார். **சிங்கள மொழியில் நல்ல தேர்ச்சி பெறும்படியாய் வேறொரு சபையில் ஒரு வருடக் காலம் என்னை பயிற்றுவித்தார்.** பின்னர் சுயாதீனமான ஓர் சபையை ஆரம்பிக்க வழி காட்டினார். மேலே **சங்கீதம் 56:4**இல் எழுதப்பட்டிருப்பது போல் என் தேவனானவர் மீது **நம்பிக்கை வைத்து பயப்படாமல் இருந்தபடியால் பதினாறு வருடகால சுயாதீனமான தேவ சேவையிற் கூடாக வல்லமையான ஆத்துமீக வளர்ச்சியைப் பெற்றுள்ளேன்.** நீங்களும் உங்களை அழைத்த இஸ்ரவேலரின் தேவனிடத்தில் விசுவாசத்துடன் அவரில் இணைத்து வாழுங்கள். **உங்கள் வாழ்விலே செழிப்பில்லை, வளர்ச்சியில்லை** எனக் கூறும் மனிதர்களின் வார்த்தைகளை குறித்து **அஞ்சாதீர்கள்.** தேவனையே நோக்கிப் பார்த்து **ஜெயத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஜெயம் தரும் நாள்!**


ஜெபம்

என் நேச ஆண்டவரே! உம்மையே நோக்கிப் பார்த்திருப்போர் சகலவற்றிலும் ஜெயம் பெற்றுக் கொள்வார்கள். என நான் இன்று தெரிந்துக் கொண்டேன். மனிதர்களின் வார்த்தைகளில் தளர்ந்து போகாதபடி உங்கள் மீது விசுவாசம் கொண்டு உங்களையே நோக்கிப் பார்த்து ஜெயம் பெற தயை கூர்ந்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். -ஆமென்-

வேத வாக்குத்தத்தம்

"நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும், அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்; அவர் தம்மைத்தாம் மறுதலிக்கமாட்டார்." (2 தீமோத்தேயு 2:13)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
22 சனி

உங்கள் ஆத்துமா ஜீவனுள்ள தேவன் மேலே தாகமாயிருக்கட்டும்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 01 – 02

"மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது." (சங்கீதம் 42:1)

கிறிஸ்துவின் பிரியமான தேவப் பிள்ளைகளே! ஜீவிக்கின்ற தேவன் **இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றும் உங்களுக்கு நல்ல காலைப் பொழுதும் நல்ல நாளுமாயிருக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.** மனித உடலின் அத்தியவசிய தேவைகளில் நீரும் ஒன்றாகும். எங்களுக்கு தாகம் ஏற்படும் போது, **நாங்கள் தாகத்தை தீர்த்துக் கொள்ளும்படியாக நீரை பருகுகிறோம்.** எம் சரீரத்தின் அப்போதைய தேவை இதனால் சம்பூரணப்படுகிறது. ஆனால் இது தற்காலிகமானதே ஏனெனில் எமக்கு மறுபடியும் தாகம் ஏற்படும் மறுபடியும் **தாகத்தை தணிக்கும்படியாக நீரை குடிக்க வேண்டியதாய் இருக்கும்.**

தேவப் பிள்ளைகளே! உங்களது உள்ளத்தின் ஆத்தும தாகம் தீர்க்கப்படுவது யாரால்? **உங்களுக்காய் தமது குற்றமற்ற திரு இரத்தத்தை சிந்திய எம் அன்பு தெய்வம் இயேசுகிறிஸ்துவினால் மாத்திரமே இத் தாகத்தை தணிக்க முடியும்.** வேறு எவராலும் இது கூடாது என வேதம் கூறுகிறது. ஒரு நாள் எம் ஆண்டவர் இயேசு சுவாமி சமாரியா நாட்டின் வழியாய்ப் போக வேண்டியிருந்தபடியால் அவர் சீகார் எனப்பட்ட ஊருக்கு வந்தார். அங்கே **யாக்கோபுடைய கிணற்றருகே இளைப்படைந்தவராய் உட்கார்ந்தார்.** அப்பொழுது **"சமாரியா நாட்டாளாகிய ஒரு ஸ்திரி தண்ணீர் மொள்ள வந்தாள். இயேசு அவளை நோக்கி தாகத்துக்குத் தா என்றார்."** ஆனால் யூதர்கள் சமாரியருடனே சம்பந்தங்கலவாதவர்களானபடியால் சமாரியா ஸ்திரி அவரது வேண்டுதலை மறுதலித்தாள். ஆயினும் **"இயேசு சுவாமி அவளுக்கு இந்த தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு ஒரு காலும் தாகமுண்டாகாது... என பதிலளித்தார்." பரி.யோவான் 4:13,14**

அன்பார்ந்தவர்களே! **சங்கீதம் 42:1**இல் **"மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவது போல் தேவனே என் ஆத்துமா உம்மை வாஞ்சித்து கதறுகிறது."** என்று தாவீது ராஜா எழுதி பாடியுள்ளார். நீங்கள் அவ்வாறு தேவனுடன் முழு உள்ளத்தோடு நெருங்குவது எவ்வாறு? என்று எண்ணுகிறீர்கள். **நீங்களும் தாவீதைப் போல் உங்கள் முழு இருதயத்தையும் இயேசுகிறிஸ்துவுக்கு அர்ப்பணியுங்கள்.** அப்போது தேவ ஆவியானவர் மூலமாக உங்கள் உள்ளத்திலே **ஜெப வாஞ்சை அதாவது தேவனுடன் பேச வேண்டும் என்ற தாகம் ஏற்படும்.** உங்களிடம் காணப்படும் சொத்து, சுகம், பணம், காணி பூமி எவ்வளவு இருப்பினும் அதினால் வரும் மகிழ்ச்சி தற்காலிகமானதே. நீங்கள் ஆண்டவராகிய இயேசு தேவனை நோக்கி ஆத்துமாவிலே வாஞ்சிக்கும் போது உங்கள் ஆத்தும தாகம் கொள்ளும் போது **சதாகால பேரின்பம் உங்களுக்கு உரிமையாகும். இந்த பேரின்பத்திற்கு பங்காளராராக நீங்களும் மாறுங்கள். வெற்றியின் நாள்!**

ஜெபம்

என் ஆத்தும நேசராகிய ஆண்டவரே! என் ஆத்மா சதாகால பேரின்பத்தை வாஞ்சிக்கும்படியாய் எனக்குள் தாகத்தை உண்டு பண்ணுங்கள். உலகத்தை தேடாது உங்களையே தேடும் ஆத்துமாவை தாருங்கள் என இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்;..." (யோவேல் 2:28)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
23 ஞாயிறு

# கர்த்தரை நம்பிக்கையாகக் கொண்ட மனுஷன் பாக்கியவான்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 03 – 04

**"கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்."** (எரேமியா 17:7)

அருமையான என் தேவப் பிள்ளைகளே! தேவன் **இயேசுகிறிஸ்துவின் நாமத்தால் நல்ல நாளாக அமையுமாறு வாழ்த்துகின்றேன்.** உங்களை பேர் சொல்லி அழைத்து தம்மிடமாய் அழைத்துக் கொண்டவராகிய பரலோக தேவ பிதாவானவர் **உங்களை எவ்வளவாய் நேசிக்கிறார் என்பதை நீங்கள் அறிவீர்களா?** ஆண்டவர் உரைக்கிறார் **"ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல் தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை"** என்பதாக. **(ஏசாயா 49:15).**

தேவப் பிள்ளைகளே! ஆகையால் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** பரமண்டலங்களிலே வாசம் பண்ணுகிற தேவ பிதாவானவர் அவருடைய திருமகன் இயேசுகிறிஸ்துவின் மூலமாக உங்களை தம்மிடம் அழைத்தவர், உங்கள் வாழ்வினிலிருந்த பாவ சாபங்களிலிருந்து **உங்களை விடுவித்து, உங்கள் வாழ்விற்கோர் புது எதிர்பார்ப்பை ஏற்படுத்தி, இடிந்து போய் கிடந்த உங்கள் வாழ்வினை மறுபடியும் கட்டியெழுப்பிய விதத்தை ஒரு வினாடி எண்ணிப் பாருங்கள்.** உங்கள் ஜீவியத்தில் நீங்கள் சந்தித்த பிரச்சினைகள், பாடுகள், துன்பங்கள், சவால்களின் நிமித்தம் உங்கள் உள்ளத்திற்கு சமாதானம், சந்தோஷம், ஆறுதல் இல்லாமல் தவித்த போது ஆண்டவர் தம் சொந்த மகன் மூலமாக **உங்கள் வாழ்விற்கு சந்தோஷம், சமாதானம், ஆறுதல் அளித்தது உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா?**

தேவப் பிள்ளைகளே! ஆயினும் உங்கள் வாழ்விலே மறுபடியும் பிரச்சினைகள், துன்பங்கள், பாடுகள் சவால்கள் ஏற்படும் வேளைகளிலே ஐயோ நான் ஆத்துமீகமாய் வாழ்ந்த போதும் **எனக்கு மறுபடியுமாக இப்படி பிரச்சினைகள் வருவது ஏன் எனக் கூறி உங்கள் உள்ளத்திலே கவலைக் கொள்ளாதீர்கள்.** வேத வசனம் கூறுகிறது **"அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள்" என்றாகும். (1பேதுரு 5:7இல்)** உங்கள் தேவ பிதாவானவர் உங்களை தமது சொந்த பிள்ளையாக மாற்றியது ஆண்டவரான அவரை நமஸ்கரிக்க மாத்திரமல்ல **(எரேமியா17:7)**இன்படி நீங்கள் **"கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவானாக" வாழும்படியாகவே உங்களை தெரிந்துக் கொண்டார். நீங்கள் உலகத்தில் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட தேவப்பிள்ளைகளாகவும் அதிஷ்டசாலியாகவும் வாழ்கின்றீர்கள். ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

என் ஆண்டவரே! உங்கள் மீது நம்பிக்கை வைப்பது எம்மை பாக்கியவானாக மாற்றும் என அறிந்துக் கொண்டேன். சாத்தான் ஆத்மீக பயணத்திற்கு விரோதமாக எனக்கு பிரச்சினைகளை உண்டு பண்ணும் பாதிப்புகளை ஏற்படுத்தும் போது நான் அசையாமல் நம்பிக்கையிலே நிலை நிற்கத்தக்கதாக கிருபை செய்யம்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை; நாணாதே, நீ இலச்சையடைவதில்லை;..." (ஏசாயா 54:4)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
24 திங்கள்

## தேவன் ஆயத்தம் பண்ணினவைகளை யார் அறிவார்?

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 05 – 06

**"எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை;"** (1 கொரிந்தியர் 2:9)

அன்பார்ந்த தேவப் பிள்ளைகளே! ***இயேசுகிறிஸ்துவின் ஜீவனுள்ள நாமத்தினால் இன்றைய தினம் வெற்றிச் சிறந்த நந்நாளாக அமையுமாறு வாழ்த்துகின்றேன்.*** ஆண்டவர் உலக முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் உங்களோடிருக்கிறபடியால் ***நீங்கள் மிக ஆசீர்வாதத்திற்குரியவர்களாய் இருக்கிறீர்கள்.*** அனால் இப்பூமியில் வாழும் அநேக மனிதர்கள் அவர் அருபியாய் இருக்கிறார் என்பதால் ***அவரை விசுவாசிக்க மறுக்கிறார்கள்.*** ஆயினும் ***அவரது சுயவிருப்பத்தின் பேரில் அழைப்பை பெற்றுக் கொண்டவர்கள் மாத்திரம் அவர் ஜீவனுள்ளவராய் இருக்கிறார்.*** என்பதை அறியும்படியாக தம் கிரியைகளுக்கூடாய் உறுதிப்படுத்தி தம் சொந்தப் பிள்ளைகளாக்குகிறார்.

தேவப் பிள்ளைகளே! மேலே கொடுக்கப்பட்ட பிரதான தேவ வசனம் கூறுகிறது. தேவன் தம்மிலே அன்பு கூறுகிறவர்களுக்கு ***"ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை காது கேட்கவுமில்லை மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை"*** என்பதாக. நாம் தாயின் கர்ப்பத்தில் இருக்கும் போதே எம்மை தெரிந்துக் கொண்ட சர்வ வல்லமையுள்ள படைப்பின் தேவனானவர். தம் சொந்த மகன் முலம் எம்மை தம்மிடம் அழைத்தவர் ***எம்மை குறித்த நல்ல திட்டங்களை ஆயத்தப்படுத்தியுள்ளார்.*** நீங்கள் எதிர்பாத்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு ***"நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன்"*** என்று கர்த்தர் சொல்கிறார். அவைகள் தீமைக்கல்ல சமாதானத்துக்கேதுவான நினைவுகளே என்று ***எரேமியா 29:11***இல் கூறியுள்ளார்.

தேவப் பிள்ளைகளே! தேவன் அருபியாய் இருப்பது போலவே அவர் எம்மை குறித்து வைத்திருக்கும் ***"ஆயத்தங்களையும், யோசனைகளையும் நாம் காண்பதுமில்லை, அறிவதுமில்லை."*** ஆயினும் ***உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! நாம் நினைப்பதை காட்டிலும் கேட்பதை காட்டிலும் எம் பிதாவானவர் நல்லதையும் உயர்ந்ததையும் தருவதாக பொருத்தனை செய்துள்ளார்.*** ஆகையால் வருங்காலத்தையோ ஆத்மீக நிலவரத்தையோ வாழ்வின் வளத்தை குறித்தோ ***நினைத்து கவலையடையாதீர்கள்!*** உங்கள் வாழ்வினைக் குறித்து உங்களை அழைத்த தேவ பிதாவானவரை விசுவாசித்து முன்னோக்கி பயணம் செய்யுங்கள். ***ஜெயம் தரும் நாள்!***

ஜெபம்

என் தேவனே! நீங்கள் அருபியாய் வாசம் பண்ணினாலும் நீங்கள் ஜீவனுள்ள தேவனானவர். நீங்கள் என்னைக் குறித்து கொண்டுள்ள சகல ஆயத்தங்களையும், யோசனைகளையும் நிச்சயமானவை என நான் அறிவேன். ஆதை நீங்கள் என்னில் நிலைத்திருக்க இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்." (யோபு 9:10)

| | | |
|---|---|---|
| ஜீவ மன்னா<br>ஒகஸ்ட்<br>25 செவ்வாய் | **உங்கள் தேவனை நீங்கள் துக்கப்படுத்தாதிருங்கள்!** | வேதவாசிப்பு<br>சங்கீதம்<br>அதி: 07 – 08 |

**"அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை சாமுவேலுக்கு உண்டாகி, அவர் சொன்னது: நான் சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது; அவன் என்னைவிட்டுத் திரும்பி, என் வார்த்தைகளை நிறைவேற்றாமற்போனான் என்றார்;... "**

(1 சாமுவேல் 15:10,11)

தேவனுக்குள் பிரியமான என் தேவ ஜனங்களே! கர்த்தரும் இரட்சகருமான ஜீவனுள்ள தேவன் **இயேசுகிறிஸ்துவின் கிருபையுள்ள நாமத்தினால் இந்நாள் நல் நாளாக அமையுமாறு வாழ்த்துகின்றேன்.** பூமியிலுள்ள சகல ஜாதிகள் மத்தியில் தன்னுடைய புத்திரராயிருக்கும்படி, தம் ஜனங்களென்று எம்மை தெரிந்துக் கொண்ட பரலோக **தேவ பிதாவானவர் நாங்கள் அவருடைய வார்த்தைகளுக்கு கீழ்படிந்து அதன்படி நடக்கிறவர்களாய் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கிறார்.** அதுவே அவரது விருப்பமாகும். ஆகவே பரத்திலே வாசம் பண்ணுகிறவராகிய எம் படைப்பின் தேவனானவரின் விருப்பத்தின்படி நாம் பூமியில் வாழ்வோமாகில் உலகின் சகல ஜாதிகளை பார்க்கிலும் **எம் வாழ்வு உயர்ந்ததாயும், பெருகினதாயும் ஆசீர்வாதமானதாயும் மாறும் நீங்கள் பாக்கியவான் எனப்படுவீர்கள்.**

தேவப் பிள்ளைகளே! சாமுவேல் வேல் தீர்க்கதரிசி சவுல் ராஜாவை நோக்கி **இஸ்ரவேலராகிய தம்முடைய ஜனங்கள் மேல் உம்மை ராஜாவாக அபிஷேகம் பண்ணுகிறதற்குக் கர்த்தர் என்னை அனுப்பினாரே.** இப்போதும் கர்த்தருடைய வார்த்தைகளின் சத்தத்தைக் கேளும் என்று கூறினார். கர்த்தர் சவுலுக்கு அனுப்பிய செய்தி இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வெளியே வந்த போது அமேலக்கு அவர்களை வழிமறித்து செய்கையை மனதிலே வைத்திருக்கிறேன். இப்போதும் **நீ போய் அமேலக்கை மடங்கடித்து அவனுக்குண்டான எல்லாவற்றையும் சங்கரித்து அவன் மேல் இரக்கம் வைக்காமல் ஸ்திரீகளையும், பிள்ளைகளையும் குழந்தைகளையும், மாடுகள், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்று போடக் கடவாய்** என்பதாகும்.

தேவப் பிள்ளைகளே! ஆயினும் சவுல் ஜனங்களோடு இணைந்து அமேலக்கியரை மடங்கடித்து ஆடுமாடுகளின் முதல் தரமானவைகளையும் இரண்டாந்தரமானவைகளையும் ஆட்டுக் குட்டிகளையும் நலமான எல்லாவற்றையும் அழிந்துப் போட மனதில்லாமல் தப்பவைத்து **அற்பமானவைகளையும், உதவாதவைகளான சகல வஸ்துக்களையும், முற்றிலும் அழித்துப் போட்டான். இதனால் கர்த்தருக்கு மிக வேதனை ஏற்பட்டு சாமுவேல் தீர்க்கதரிசியிடம் "நான் சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது... என்பதாக"** உரைக்கிறார். ஏனெனில் சவுல் அவருக்கு கீழ்படியாது போனபடியால் கர்த்தர் அவன் மீது பிரியமாயிருக்கவில்லை. நீங்கள் சவுலை போல் இராதபடி எந்நேரமும் தேவ சத்தத்திற்கு கீழ்படிந்து அதன்படி செயலாற்றுங்கள். அப்போது தேவன் உங்கள் மீது நேசம் கொண்டு **உங்களை ஆசீர்வதிப்பார். ஆசீர்வாதத்தின் நாள்!**

**ஜெபம்**

என் அன்பின் இயேசுவே! என்னை அளவில்லாமல் நேசிக்கும் பரலோக தகப்பனே! நீங்கள் என் அப்பாவானபடியால் நான் ஆசீர்வதிக்கப்பட்டவனாக இருக்கிறேன். உங்களை மனநோக செய்யாமல் கீழ்படிந்து நடந்து ஆசீர்வாதங்களை பெற அநுக்கிரகம் செய்யுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய கற்பனை தூய்மையும், கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது." (சங்கீதம் 19:8)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
26 புதன்

உங்களில்
தேவ சித்தம்
நிறைவேறும்படியாக
இடமளியுங்கள்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 09 – 10

**"உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக."**
(பரி.மத்தேயு 6:10)

நேசமுள்ள தேவப் பிள்ளைகளே! ஜீவனுள்ள தேவன் ***இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் உங்களுக்கு நல்ல நாளாக இருக்கும்படி வாழ்த்துகின்றேன்.*** பரலோகத்திலிருந்து கிரியை செய்யும் அங்கே வாசம் பண்ணும் ஒரே தேவன் நம் தேவனே! அவர் இப்பூமியில் வாழும் எம்மை ***தமது சொந்த பிள்ளைகளாக மாற்றியதுடன் பரலோக இராஜ்யத்திலும் பங்களித்துள்ளார்.*** ஆகையால் நாங்கள் இப்பூமியில் வாழ்ந்த பரலோகத்தில் வாசம் பண்ணும் படைப்பின் தேவனை அழைக்கவும் ***அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வரப்பிரசாதத்தையும் எமக்களித்துள்ளார்.***

தேவப் பிள்ளைகளே! ***உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!*** தேவப் பிள்ளைகளாகிய நாங்கள் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே! மேலே தரப்பட்ட ***பரி.மத்தேயு 6:10***இல் எழுதப்பட்டுள்ளது. ***"உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக!"*** என்பதாக. இப்படி சொல்லி ***அவர் பரலோக பிதாவிடம் ஜெபித்தார்.*** இதன்படி எம்மைப் படைத்தவர் பரலோகத்தில் வாசம் பண்ணுகிறவரும் பரலோகத்தில் போலவே பூலோகத்திலும் அவர் சித்தத்தை நிறைவேற்றுகிறவராய் இருக்கிறார் என்பதை இது தெளிவுப்படுத்துகிறது. இயேசு சுவாமி கூறுகிறார். என் சித்தத்தின்படியல்ல ***"என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன். என்று பரி.யோவான் 6:38 இதை வெளிப்படுத்துகிறது."***

தேவப் பிள்ளைகளே! பரலோகத்திலே தேவப் பிதா இப் புவியில் சகல மனிதர்கள் மத்தியில் ***எம்மை அவரிடமாக அழைத்து எம் வாழ்க்கையில் அவரது சித்தத்தை செயல்படுத்த ஆரம்பிக்கிறார்.*** ஆகவே அவரைத் குறித்து அறிந்தவர்களாகிய நாம் எம் வாழ்க்கையில் ***தேவ சித்தத்தை நிறைவேற்ற இடமளிப்போம்.*** ஏனெனில் எம் ஆண்டவர் ஒரு பலவந்தமாய் எம்மிடம் எதையும் பெற்றுக் கொள்வதில்லை. நாம் விருப்பத்தோடு எம் வாழ்க்கையை ***அவருக்கு அர்ப்பணித்தால் அவரது மேன்மையான நோக்கங்களுடன், பெரிய காரியங்களை நிறைவேற்றுவார்.*** அது மாத்திரமல்ல எம் சொந்த சித்தங்களை கைவிட்டு அவர் சித்தங்கள் மாத்திரம் இடமளிக்கும்படியாய் ஜெபிப்போமாகில் அதை விரும்பும் ஆண்டவர் தாமே ***எம்மை ஒவ்வொரு நாளும் ஆசீர்வதித்து தினந்தோறும் எம்மை உயர்த்துவார். ஜெயம் தரும் நாள்!***

ஜெபம்

என் தேவனே! உங்கள் மனவிருப்பம் எதுவோ அது என் வாழ்வில் நிறைவேறும்படியாக என்னை அர்ப்பணிக்கிறேன். ஆண்டவரே! உங்கள் சித்தம் என்னில் நிறைவேறும்படியாக என்னை ஆசீர்வதித்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"அவரோவென்றால் ஒரே மனமாயிருக்கிறார்; அவரைத் திருப்பத்தக்கவர் யார்? அவருடைய சித்தத்தின்படியெல்லாம் செய்வார்." (யோபு 23:13)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
27 வியாழன்

# சேனைகளின் கர்த்தரிடத்தில் திரும்புங்கள்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 11 – 12

**"ஆகையால் நீ அவர்களை நோக்கி: சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்: என்னிடத்தில் திரும்புங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; அப்பொழுது நான் உங்களிடத்துக்குத் திரும்புவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்."** (சகரியா 1:3)

அன்பார்ந்த தேவப் பிள்ளைகளே! ஜீவிக்கின்ற தேவன் **இயேசுகிறிஸ்துவின் நாமத்தால் இன்றைய தினமும் ஜெய தரும் நாளாய் அமையும்படி பிரார்த்திக்கின்றேன்.** தேவ பிள்ளைகளாகிய நீங்கள் உங்கள் வாழ்க்கையை குறித்து சஞ்சலப்படாதீர்கள் ஏனென்றால் தேவப் பிள்ளைகள் ஐயோ தேவதாசன் அவர்களே! நான் அநேக பிரச்சினைகள் மத்தியில் வாழ்கின்றேன். என கண்ணீருடனும், வேதனையுடனும கூறுவதைக் கவனித்திருக்கின்றேன். அப்போது **நான் நீங்கள் கலக்கமடையாதீர்கள்**! உங்கள் தேவனுக்கு உங்களுக்கு விடுதலையை பெற்றுத் தருவது பெரியகாரியமல்ல, **நீங்கள் அவரை விசுவாசியுங்கள் என்று ஆறுதல் கூறுவேன்.**

தேவப் பிள்ளைகளே! **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக**! உங்கள் வருமானத்தைக் குறித்தும், **உங்கள் வாழ்க்கையின் செழிப்பை, பெருக்கத்தை நினைத்து கலங்கிக்கொண்டிருக்கிறீர்களா? நீங்கள் கலக்கமடைய தேவையில்லை ஏற்ற வேளையிலே சகல நன்மையான ஆசீர்வாதங்களையும் உங்களுக்கு அருள தேவனால் முடியும்.** ஆகையால் ஒரு போதும் நீங்கள் ஆண்டவரை விட்டு விலகி போகாதீர்கள். இவ்வளவு காலமாக தேவனையே நம்பி ஆத்மீகமாக வாழ்ந்த போதும் எந்த ஒரு ஆசீர்வாதத்தையும் பெறவில்லையே என கூறி தேவனைக் குறித்த நம்பிக்கையில் தளர்ந்து போகாதீர்கள். ஒரு விசை உங்களை நீங்களே சோதித்தறியுங்கள். ஏனெனில் **சகரியா 1:3**இல் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால் **"என்னிடத்தில் திரும்புங்கள் அப்பொழுது நான் உங்களிடத்துக்குத் திரும்புவேன்"** என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

தேவப் பிள்ளைகளே! உங்களுக்குரிய ஆசீர்வாதங்கள் தாமதமாவது எதனால் என அறிந்துக் கொள்ளும்படியாக **உங்கள் ஆத்மீக செயல்களை சோதித்துப் பாருங்கள் உங்கள் ஜெப வேளைகளை தவிர்த்து ஆத்துமாவிலே சோர்வடைந்து தேவனைத் தேடுவதை விட்டு விட்டீர்களா?** உங்களை வல்லமைப்படுத்தும் தேவனுடைய வார்த்தைகளை வாசிப்பதை விட்டு, விட்டு தேவனுக்குரிய **நேரங்களையெல்லாம் வீணாக போக்கினீர்களா? உங்கள் தேவ சபையில் நடக்கும் உபவாச ஜெபங்கள், ஸ்தோத்திர ஜெபங்கள் இன்னும் ஆத்மீக காரியங்களின் பங்கெடுப்பை விட்டு விட்டீர்களா?** அப்படியாயின் மறுபடியுமாக அக்குறைகளையெல்லாம் சீர்ப்படுத்தி தேவனிடம் மறுபடியுமாக திரும்புங்கள் அப்போது **ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வீர்கள். ஜெயத்தின் நாள்**!


ஜெபம்

என் நேசத் தகப்பனே! உங்களை முழு உள்ளத்தோடு தேடுவதன் மூலம் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளும்படியாக இன்று முதல் முழு உள்ளத்தோடு திரும்ப எனக்கு தயை புரியுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். **–ஆமென்–**

வேத வாக்குத்தத்தம்

"அவர்கள் தங்கள் குற்றங்களை உணர்ந்து, என் முகத்தைத் தேடுமட்டும் நான் என் ஸ்தானத்துக்குத் திரும்பிப் போய்விடுவேன்; தங்கள் ஆபத்தில் என்னைக் கருத்தாய்த் தேடுவார்கள்." (ஓசியா 5:15)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
28 வெள்ளி

## தீமையான காலத்தில் மௌனமாயிருங்கள்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 13 – 14

**"ஆகையால் புத்திமான் அந்தக்காலத்திலே மௌனமாயிருக்கவேண்டும்; அந்தக் காலம் தீமையான காலம்."** (ஆமோஸ் 5:13)

அன்பார்ந்த தேவப் பிள்ளைகளே! ஜீவனுள்ள **இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றும் உங்களுக்கு நல்ல நாளே என வாழ்த்துகின்றேன்.** இவ் *ஜீவ மன்னா* தினசரி ஏட்டின் மூலம் தேவனுடைய வார்த்தைகளை வாசித்து உங்கள் ஆத்தும போசனையை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்ட நீங்கள் யாவரும் அதிர்ஷ்டசாலிகளே! ஐந்து வருட காலங்களாக இந்த **ஜீவ மன்னா** சஞ்சிகைக்கூடாய் உங்களுடன் தொடர்புக் கொள்ள முடிந்தது எனக்குக் கிடைத்த பாக்கியமென்று நினைக்கிறேன்.

தேவப் பிள்ளைகளே! உலக மனிதர்கள் ஒரு காரியத்தில் அல்லது ஒரு துறையில் மாத்திரமே தேர்ச்சிப் பெற்றவர்களாய் இருக்கிறார்கள். ஏனெனில் உலக இயழ்பின்படி ஒருவன் ஒரு காரியத்தில் மாத்தரமே சித்திப் பெற்றவர்களாக கணிக்கப்படுகிறார்கள் என்பதை நாம் கேள்விப்படுகிறோம். ஏனெனில் உலக மனிதர்களின் செயல் திறமைகளுக்கு ஒரு வரையறையுண்டு ஆயினும் **தேவ ஆவியானவர் மூலம் கிடைக்கப் பெறுகிற திறமைகள் வரங்கள், புத்தி, ஞானம் எல்லாமே வரையறை அற்றதாகும்.** ஏனெனில் அவர் அளவற்றவராய் இருக்கிறபடியினாலேயாகும். தேவன் அளவுகளை கடந்தவராய் இருப்பதால் அவரது **தேவ ஆவியானவருக்கூடாய் எமக்கருளும், திறமைகளும், சித்திகளும் எல்லையற்றதாகும்.**

மேலே தரப்பட்ட எம் பிரதான வசனம் **ஆமோஸ் 5:13**இல் ஆகையால் **"புத்திமான் அந்தக் காலத்திலே மௌனமாயிருக்க வேண்டும்."** அந்த காலம் தீமையான காலம் என்று கூறுகிறது. **விஷேசமாக** உலக மனிதர்கள் ஒரு **சிறு விஷயத்தில் கூட கலக்கமடைந்து போவார்கள்.** சிறு விஷயத்தையும் பெரிதாக்கி இன்றும் அநேக பிரச்சினைகள் உண்டு பண்ணி விடுவார்கள். ஆயினும் ஆத்மீகர்களாகிய நாம் புத்திமான்களாய் நடந்துக் கொள்ள வேண்டிய காலங்கள் இது என்று எமக்கு இன்று அறிவிக்கிறார். **எங்கள் பிரச்சினைகளுக்கு விடுதலை வாழ்க்கையில் எதிர்பார்க்கும் விடயங்களை ஆண்டவர் நிறைவேற்றி தரும்வரை நாம் மௌனமாகவும், பொறுமையுடனும் காத்திருப்பது அவசியமாகும்.** தேவனின் வருகை மிக சமீபமாய் இருப்பதால் எம் விரோதியான சாத்தான் மிக கோபம் கொண்டவனாய் எங்களுக்கு விரோதமாக காரியங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறான். காலங்கள் தீமையானதாயிருப்பதால் **நாம் புத்திமான்களாய் மௌனமாயிருப்போம். இதுவே எம் ஆத்மீக ஜீவியத்தின் வெற்றிக்கு வழிகாட்டும். வெற்றியின் நாள்!**

ஜெபம்

என் நல்லமேய்ப்பனான இயேசுவே! காலம் தீமையாக இருப்பதால் நாம் உமக்குள் மௌனமாயிருந்து ஜெபித்து தீமையின் காலத்தை வென்று ஆத்மீக ஜீவியத்தில் உம்முடைய ஆலோசனையைப் பெற்று மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக வாழ கிருபை செய்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"சொற்களின் மிகுதியில் பாவமில்லாமற்போகாது; தன் உதடுகளை அடக்குகிறவனோ புத்திமான்."
(நீதிமொழிகள் 10:19)

ஜீவ மன்னா
ஓகஸ்ட்
29 சனி

# மாரா போன்ற கசப்பான வாழ்வை மதுரமாக்கும் தேவன்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 15 – 16

**"மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்; அப்பொழுது கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார்; அதை அவன் தண்ணீரில் போட்டவுடனே, அது மதுரமான தண்ணீராயிற்று..."** (யாத்திரகாமம் 15:25)

அன்பார்ந்த தேவப் பிள்ளைகளே! ஜீவனுள்ளவரான **இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினால் இன்றை தினம் உங்கள் வாழ்க்கையை தித்திப்பு நிறைந்ததாக இருக்குமாறு வாழ்த்துகிறேன். சுமார் 700 கோடி** ஜனங்கள் வாழும் இப் புவியினிலே எம் ஒவ்வொருவரையும் தமக்கென்று தெரிந்துக் கொண்ட **எம் கர்த்தர் நல்லவரே!** அவர் எமக்கருளும் நன்மையின் ஈவுகளுக்கு நிகர் இவ்வுலகில் எதுவுமே கிடையாது அதே போல் அவர் அன்புக்கு ஈடுயிணை இல்லையே.

தேவனுக்குரியவர்களே! எகிப்து தேசத்திலே அடிமைகளாக்கப்பட்டிருந்த இஸ்ரவேலர்களை இரட்சித்து வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு அவர்களை வழி நடத்திச் சென்ற கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் அநேக **"அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்தார். யாத்திராகமம் 15ம் அதிகாரம் 22முதல் 25"** வரை வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அவர் கசப்பான நீரை இனிப்பாக மாற்றினார் என்பதாகும். இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தை விட்டு வெளியேறி **"சிவந்த சமுத்திரத்தை கடந்து சூர்வனாந்தரத்துக்கு"** சென்ற போது **மூன்று நாள் தண்ணீர் கிடையாமல் நடந்தார்கள்.** மாராவிலே வந்த போது மாராவின் தண்ணீர் கசப்பாயிருந்ததினால் குடிக்க கூடாதிருந்தது. ஜனங்கள் என்னத்தைக் குடிப்போம் என **மோசேக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். ஆயினும் மோசே கர்த்தரை நோக்கி கூப்பிட்டான்.** அப்பொழுது **கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார்.** அதை அவன் தண்ணீரிலே போட்டவுடனே அது மதுரமான தண்ணீராயிற்று. உலகின் மாந்தர்கள் தமது வாழ்வின் கசப்புக்களை அகற்றி இனிமையான வாழ்வை பெற்றுக் கொள்ளும்படியாக உலகில் பரிகாரம் தேடுகிறார்கள். ஆனால் இயேசுவே எமது வாழ்விற்கு பரிகாரியாக இருக்கின்றார்.

தேவப் பிள்ளைகளே! மாராவின் தண்ணீரைப் போல் உங்கள் வாழ்க்கை கசப்பனதாய் இருக்கிறதா? மோசே மூலமாய் மரத்தைக் கொண்டு **மாராவின் கசப்பை மதுரமாக மாற்றிய கர்த்தர் அவர் வாயினால் புறப்படும் ஒரு வார்த்தையைக் கொண்டு உங்கள் கசப்பான வாழ்வினை** மதுரமாக மாற்ற வல்லவர் என்பதை விசுவாசியுங்கள். உங்கள் வாழ்க்கையில் எவ்வளவு துன்பங்கள், உபத்திரவங்கள், வந்த போதும் ஆண்டவர் **உங்களில் அற்புதம் செய்து உங்களை மதுரமாக மாற்றுவார். ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

என் தேவனே! மாராவின் தண்ணீரை மதுரமாக மாற்றினீர்கள். அதே போல் பிரச்சினை, துன்பம், கஷ்டம் போன்றவற்றால் கசப்பாய் இருக்கிற என் வாழ்வினை மதுரமாக மாற்ற வல்லவராவீர்கள் என்னையும் ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்." (சங்கீதம் 34:8)

ஜீவ மன்னா
ஒகஸ்ட்
30 ஞாயிறு

## தேவப் பயம் உள்ளவர்களுக்கு கருணை மிகுந்த தேவன்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 17 – 18

"...கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே."
(யாக்கோபு 5:11)

அருமையான தேவப் பிள்ளைகளே! ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் **இன்றும் உங்களுக்கு நல்ல நாளாக இருப்பதாக ஒவ்வொரு நாளின் காலைப் பொழுதில் உங்களை சந்திப்பவர்கள் உங்களுக்கு நல்ல நாள் என வாழ்த்துவார்கள்.** அந்த வார்த்தைகள் எவ்வளவிற்கு நிறைவேறும் என்பது கூற இயலாது. ஆனால் எம் இயேசுகிறிஸ்தவின் ஜீவனுள்ள நாமத்தில் நாங்கள் நல்ல நாள் **ஜெயத்தின் நாள்** என வாழ்த்தும் போது அது நிச்சயமாக நிறைவேறும் என்பதை நாம் அறியோம். ஏனெனில் ஆண்டவருடைய **நாமம் வானத்திலும், பூமியிலும் செயல் புரிகிற ஒரே ஜீவனுள்ள நாமம் ஆகும்.**

தேவப் பிள்ளைகளே! நீங்கள் நாள்தோறும் காலை வேளையில் உங்கள் வேலைகளை ஆரம்பிக்கும் முன்னர் தேவனுடைய பாதத்தில் அமர்ந்து **உங்கள் ஆவி, ஆத்தமா, சரீரம் இவைகளை அவரது கைகளில் ஒப்புவித்து ஜெபியுங்கள்.** அதன் பிறகு உங்கள் வழமையான கடமைகளை ஆரம்பியுங்கள். அப்போது அவரது சகல அநுக்கிரங்களும், ஆசீர்வாதங்களும் உங்களுக்கு கிடைக்கும். ஆகையால் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** இன்றைய தினத்தின் எமது தலைப்பு திரு வசனம் **யாக்கோபு 5:11**இல் கூறுகிறது "**...கர்த்தர் மிகுந்த உருக்கமும், இரக்கமுள்ளவராயிருக்கிறார்**" என்பதாக. அப்படியாயின் அவருடைய பிள்ளைகளுக்கு ஏன் இவ்வளவு **கஷ்டம், பிரச்சினைகள், துன்பத்துயரங்கள் ஏற்படுகிறது என நீங்கள் நினைக்கலாம்.**

தேவப் பிள்ளைகளே! எமது தேவனாகிய இயேசுகிறிஸ்து மிகவும் நல்லவர் ஆவார். அவர் எம் பக்கத்தில் இருந்து **எம் எதிரிகளுடன் எமக்காய் யுத்தம் செய்வார்.** எம் ஆத்மீக வாழ்க்கைக்கு விரோதமான போராட்டங்களுக்கு முகம் கொடுக்க நேரிடும் போது தேவன் இடமளித்து அவற்றில் **ஜெயம் பெறும்படியாக நாம் செயல்படும் விதத்தை கவனிக்கிறார்.** ஆயினும் எம்மால் சுமக்கவோ, தாங்க திராணி இல்லாத சோதனைகள் சந்திக்க தேவன் இடமளிப்பதில்லை சாத்தான் யோபுவுக்கு கொண்டு வந்த சோதனைகளில் அவனை மீட்டுக் கொள்ளாதபடி அவன் **தேவ பயத்துடன் அவைகளுக்கு முகம் கொடுத்து சாத்தானை மேற் கொள்வதை அவர் கவனித்துக் கொண்டிருந்தார்.** அதன் பிறகு அவன் **இழந்து போனவைகளை இருமடங்காக ஆசீர்வதித்தார்.** இன்றும் அவர் அவ்வாறே செய்கிறார். **தேவ பயத்துடன் ஜீவிப்பவர்கள் மீது அவர் இரக்கமும், உருக்கமுள்ளவராயிருக்கிறார். உங்களையும் இரட்டிப்பான ஆசீர்வாதங்களால் நிரப்புவார். ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

என் தேவனே! உமக்கு பயமுள்ளவர்களாக ஜீவிப்பவர்கள் மீது இரக்கமும், மனதுருக்கமும் உள்ளவரே! நான் என ஆத்மீக பயணத்திலே தேவ பயத்தடன் நடந்து உங்கள் இரக்கத்தையும், உருக்கத்தையும் பெற்றுக் கொள்ள கிருபை செய்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம்."
(நீதிமொழிகள் 22:4)

ஜீவ மன்னா

ஒகஸ்ட்

31 திங்கள்

## உங்கள் வாழ்க்கையில் தேவனின் மகிமையை காண்பது எப்படி?

வேதவாசிப்பு

சங்கீதம்
அதி: 19 – 20

**"இயேசு அவளை நோக்கி: நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா என்றார்."**
(பரி.யோவான் 11:40)

பிரியமான தேவப் பிள்ளைகளே! இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் **இன்றைய நாளில் தேவனுடைய மகிமையை உங்கள் வாழ்வில் காண வேண்டுமென வாழ்த்துகின்றேன்.** மாதத்தின் இறுதி நாளான இன்று முப்பது நாட்களும் உங்களை கண்ணின் மணியாக காத்து முன்னோக்கி வழி நடத்திய தேவனை ஸ்தோத்தரிக்கின்றேன்! நாம் எமது பரலோகத் தேவனை கண்களால் காணவில்லை. **தேவன் தனது சொந்த குமாரனை உலகிற்கு அனுப்பி எங்கள் பாவங்கள், சாபங்களுக்காக சிலுவையில் பலியாக அர்ப்பணிக்க சித்தமாகி எங்களை வாழ்விற்கு பங்காளர்களாக மாற்றினார்.** அப்படியே தேவ குமாரனான இயேசுகிறிஸ்து **மரணத்தை வென்று** மீண்டுமாக எழுந்து எங்கள் மத்தியில் **வாசம் பண்ணுகிறார்.** அதை **விசுவாசிக்கின்ற நாம் உண்மையிலேயே அதிரஷ்டக்காரர்களாவோம்!**

தேவப் பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட **பரி.யோவான் 11:40**இல் இயேசுகிறிஸ்து கூறுவது **"நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்"** என்று நான் உனக்குச் சொல்லவில்லையா என்றார். அதன் கருத்து என்னவெனில் ஆத்மீக பிள்ளைகளான எமக்கு எங்களுக்கு **விசுவாசம் மிக அவசியமாகும்.** உலகில் வாழ்கின்ற பெரும்பாலான மனிதர்கள் **தேவன் பேரில் விசுவாசங் கொண்டிருப்பினும் அவர்கள் உறுதியான விசுவாசத்தோடு இருக்கின்றார்களா?** என்பது கேள்விக் குறியாக இருக்கின்றது. **நமது இயேசுகிறிஸ்து அரூபியாக இருக்கின்றார்.** எனினும் அவர் செய்கைக்கூடாக ஜீவிக்கின்றவராக நீங்கள் காண்கிறீர்கள். ஆனாலும் அப்படி காண முடிவது **தேவன் பேரில் நாங்கள் உறுதியான விசுவாசங் கொண்டிருந்தால் மாத்திரமேயாகும்.**

தேவப் பிள்ளைகளே! உங்களால் தீர்த்துக் கொள்ள முடியாத **பலவித பிரச்சினைகள், உபத்திரவங்கள் என்பவற்றின் நிமித்தம் அங்கலாய்க்கின்றீர்களா?** ஆனாலும் நீங்கள் மனங்கலங்காதீர்கள். இன்றைய நாளிலும் இயேசுகிறிஸ்து கூறுவது நீ விசுவாசித்தால் தேவ மகிமையைக் காண்பாய் என்றே. **ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது** என்ற வேத வாக்கியம் நிறைவேறிற்று **(யாக்கோபு 2:22,23) "மனுஷன் விசுவாசத்தினால் மாத்திரமல்ல கிரியைகளினாலே நீதிமானாக்கப்படுகின்றார்கள். உறுதியான விசுவாசத்தோடும் விசுவாசக் கிரியைகளினாலும் முன்னோக்கிப் பயணியுங்கள்". மரித்த லாசரஸ் உயிர்ப்பித்த இயேசு உங்களோடிருப்பாராக! இன்றைய நாள் ஜெயம் கொடுக்கும் மகிமையின் நாள்!**




என் தேவனே! குமாரனை விசுவாசிக்கின்ற யாவரும் உங்கள் மகிமையை காணச் செய்வதனால் ஸ்தோத்திரம்! இயேசுவையே முழு உள்ளத்தோடு விசுவாசித்து வாழ்ந்து அவருடைய மகிமையைக் காண ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்." (எபிரேயர் 11:6)

என்பதனையும் அறியத்தருகின்றேன்.

தேவப் பிள்ளைகளே! இக்கட்டளையை நிறைவேற்றுவதினால் தேவன் ஒரே பிதாவானவரின் பிள்ளைகளான நாம் அனைவரும் அன்பு நிறை சகோதர, சகோதரிகளானபடியால் எங்கள் மத்தியில் யாரும் உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்ற எண்ணம் இல்லாதிருக்க வேண்டுமென்பதே தேவனின் கருத்தாகும். பரலோகப் பிதாவானவர் எல்லோரையும் ஒரே மாதிரியாக நேசிப்பதால் நாங்களும் ஒவ்வொருவரையும் அந்தஸ்து பாராது உண்மை அன்புடன் வழிநடத்த வேண்டுமென்பதே அவரது எதிர்ப்பார்ப்பாகும். இதைக் குறித்து சற்று ஆழமாக சிந்தித்துப் பாருங்கள். விஷேடமாக பெருமை கொள்பவர்களையே தேவன் எதிர்த்து நிற்கிறார். ஆனால் தாழ்மையுள்ளவர்களுக்கோ அவர் கிருபையளிக்கின்றார்.



சமுதாய ரீதியில் சாதாரணமாக எங்களோடு ஆடம்பரமான வசனங்களில் பெருமையோடு பேசுவதைக் கேட்க பிரியப்பட மாட்டோம். எங்கள் சர்வ வல்லமையுடைய தேவனோ என்றால் ஒரு சிறிய மனிதனின் கால்களைக் கழுவினாரெனின் அது எத்தகைய மேலான தாழ்மை என்பதை அறிகின்றீர்களா?



ஆகையால் ஆத்மீக பிள்ளைகளான நீங்கள் உங்கள் சபையில் சிறிய பதவியில் ஊழியக் கடமை செய்யக் கிடைக்குமிடத்து அல்லது உதவி ஊழியராக அபிஷேகம் செய்யப்பட்டீர்களானாலும் ஒரு போதும் அவைகளைக் குறித்து பெருமையடையாதீர்கள். தேவன் உங்களை மேன்மேலும் ஆசீர்வதிக்கவும், உயர்த்தவும் உங்கள் வாழ்வில் தாழ்மையைத் தரித்துக் கொள்ளுங்கள். உயர்பதவி, சிறிய பதவி வகிக்கும் யாவரையும் சரிசமன அன்பு கொள்ளும் இருதயமாக மாற்றிக் கொள்ளுங்கள். அப்பொழுது தேவ உங்களை ஆசீர்வதிப்பார்.



தேவப் பிள்ளைகளே! நீங்களும் இதைக்குறித்து நினைத்து தேவனுடைய வசனத்தின்படி நடப்பீர்களாயின் பரி.யோவான் 13:8இல் தேவ வசனத்தின் பிரகாரம் தேவனுக்கும் எங்களுக்குமிடையிலான உறவு மேன்மேலும் பெலனடையும். ஏனென்றால் "நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது என்றான்." இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக "நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை என்றார்." பரி.யோவான் 14:23இல் வசனத்தில் கூறியுள்ளபடி இயேசுவை நேசிப்பவர்கள் அவரது வசனத்தை கைக் கொள்ளுவார்கள். அவனில் பிதா அன்பாயிருப்பார். பிதாவானவரும், குமாரனும் வந்து அவனோடே வாசம் பண்ணுவார்கள். 24வது வசனத்தில் "என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக் கொள்ள மாட்டான்" என்று எழுதப்பட்டுள்ளது. தேவன் கூறிய வசனம் அவருடையதல்ல பரலோகப் பிதாவானவருடையதென்று எழுதப்பட்டுள்ளது.




ஆகையால் தேவப் பிள்ளைகளே! இயேசுவின் வசனத்தின்படி தேவனுக்கு அன்பு செய்து யோவானைப் போல இயேசுவின் மார்பில் உரிமையோடு சாய்ந்து தேவனுக்கும், உங்களுக்கும் இடையிலான ஆத்மீக உறவை பெலப்படுத்தி தேவனுடைய இராஜ்யத்திற்கு உகந்த பிரியமான வாழ்க்கை வாழ முயற்சி செய்யுங்கள். "கர்த்தர் தம்முடைய ஜனத்தின் மேல் பிரியம் வைக்கிறார். சாந்த குணமுள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார்" என சங்கீதம் 149:4இல் எழுதப்பட்டுள்ளது.

**உங்கள் அனைவருக்கும் இயேசு துணை!** போதகர்: ஏ.ஜே.ஜோசப்

அன்பார்ந்தவர்களே! எமது சபைக்கூடாக **சுபஹோராவ** என்னும் புத்தகம் சிங்கள மொழியில் மாத்திரம் வெளியிட்டிருக்கின்றோம். அதன் மூலமாக அநேகர் நோயினாலும், சாபங்களினாலும், பாவங்களினாலும் விடுதலைப் பெற்று வருகின்றார்கள். சிங்கள மொழி வாசிக்கத் தெரிந்தவர்கள் தலைமைப் போதகரின் விலாசத்திற்கு அல்லது ஜீவ மன்னா தினமஞ்சரியில் காணப்படும் தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்புக் கொண்டு பெற்றுக் கொள்ளுங்கள்.




## எங்கள் சபைக்கு வருவதற்கான வீதியின் வரைப்படம்




**ஜீவ மன்னா வாசக கட்டணங்கள், சந்தோஷ காணிக்கைகள், காசு கட்டளைகள் என்பனவற்றிற்கு!**

**பணம் அனுப்ப** — கிராண்டபாஸ் தபால் காரியாலயம் போதகர் ஏ.ஜே.ஜோசப் என்னும் பெயருக்கு அனுப்புங்கள்.

**பணம் வைப்பிலிட** — போதகர் ஏ.ஜே.ஜோசப்
கணக்கு இலக்கம் 8076982701
கொமர்ஷல் வங்கி, கிராண்ட்பாஸ் கிளை
பணத்தை வைப்பிலிட்டு பற்று சீட்டை எமக்கு அனுப்பவும்



போதகர் ஏ.ஜே.ஜோசப்

ஜீவ மன்னா தின தியான புத்தகத்தை தபால் மூலம் ஒவ்வொரு மாதமும் பெற்றுக் கொள்ளலாம்.
விலாசத்தை அனுப்பவும்

R/N:- QD/66/NEWS/2015


## இயேசு கைவிடார் சுவிசேஷ பணியகம்

இல 33/1, புதிய களனிப் பால வீதி, கொழும்பு — 14.

011-2334865 071-4922929

arulandu.joseph@gmail.com www.jesusnf.org


இல 33:1 புதிய களனிப் பால வீதி, கொழும்பு -14, ஜீவ மன்னா குட் நியூஸ் பிரின்டஸ் அச்சகம் மூலம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.